## கமெண்ட் கந்தர்...

ரணிலை எதிர்க்கப்போய் பெரமுன எம்.பிக்கள் இருக்கிறதையும் இல்லாமலாக்கிக்கொள்ளப் போறாங்கள்....



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 186 சுபகிருது வருடம், மாசி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை (09.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 16, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர்களை சந்திப்பொன்றுக்கு அழைத்தாராம் பெசில் ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் இரவு இந்த சந்திப்பு நடந்தது. ஆனால், 60 எம்.பிக்கள் அழைக்கப்பட்டிருந்தபோதும் மிகக்குறைவான எம்.பிக்கள் மட்டுமே வந்தனராம். பலர் தொலை பேசிக்கு பதில் அளிக்கவில்லையாம். மேலும் பலர் வருவதாக உறுதியளித்துவிட்டு வராமல் விட்டனராம்.

இதனால் விரத்தியடைந்துள்ளதாம் ராஜபக்ஷ தரப்பு.

# ரணிலுக்கான ஆதரவு வாபஸ்!

## பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பலர் தீர்மானம்

## பாராளுமன்ற எதிர்க்கட்சி வரிசையில் அமரவும் முடிவு

(நமது நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெறுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தீர்மானித்துள்ளதாக அறியமுடிந்தது.

ஜனாதிபதி ரணிலின் மேற்குலக நாடுகளுக்கான ஆதரவு, அமைச்சரவையில் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடமளிக்காமை உள்ளிட்ட...

02 பக்கம்



## முக்கிய பொருட்களின் விலைகள் குறைப்பு

கோதுமை மா, வெள்ளை சீனி, பருப்பு மற்றும் பாணின் விலைகளைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ப்றீமா மற்றும் செரண்டிப் கோதுமை மாவின் விலை 15 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில், 450 கிராம் ஒரு இறாத்தல் பாணின் விலை 10 ரூபாவால் குறைவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

02 பக்கம்

## பேரீச்சம்பழ இறக்குமதி வரி ஒரு ரூபாவாக குறைப்பு

பேரீச்சம்பழ இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட வரியை கிலோகிராம் ஒன்றுக்கு 200 ரூபாவிலிருந்து 1 ரூபாவாக குறைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முஸ்லிம்களின் நோன்பு காலத்தை முன்னிட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



02 பக்கம்

## தபால்மூல வாக்களிப்பை மார்ச் இறுதியில் நடத்தத் திட்டம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பை எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தேர்தலுக்கான தபால்மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு பொதிகள் எதிர்வரும் 21ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்துவது தொடர்பான...

02 பக்கம்

## நாட்டில் 3 இலட்சம் சிறார்களுக்கு பாதுகாப்பற்ற முறையில் வாழ்வு

03 பக்கம்

## மின் கட்டணத்தை குறைக்க முடியும்!

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன

புதிய மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு, எதிர்க் கட்சிகள் உட்பட அனைவரும் ஆதரவளித்தால் எதிர்வரும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை குறைக்க முடியுமென மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (08) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் மின்சாரக் கட்டணம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத்...



02 பக்கம்

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்குப் பொதி இடைநிறுத்தம்

### உடனே வழங்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் கோரிக்கை

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கும் போஷாக்குப் பொதி இரண்டாயிரம் ரூபாவி லிருந்து 4ஆயிரத்து 500 ரூபாவாக உயர்த்தப் பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும். என்றாலும், மாத வருமானம் 50ஆயிரம் ரூபா வுக்கு குறைவாக உள்ள தாய்மார்களுக்கு மட்டுமே இது என வரையறுக்கப்பட்டுள் ளதாகவும், இதன் காரணமாக அரச ஊழியர்கள் உட்பட பல தாய்மார்களுக்கு இந்த சலுகைப் பொதி வழங்கப்படாதுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்று (08)...

02 பக்கம்

## எரிபொருள் கோட்டா புதுப்பிப்பு செவ்வாய்க்கிழமை

தேசிய எரிபொருள் அனுமதி QR கோட்டா நேற்று (08) முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நள்ளிரவில் புதுப்பிக்கப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி நேற்றுக் காலையும் அனைத்து கணக்குகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

02 பக்கம்

## கொடூர பாதுகாப்புச் சட்டங்களை கைவிடவேண்டும் இலங்கை

### ஐ.நா. வலியுறுத்து

இலங்கை கொடூரமான பாதுகாப்புச் சட்டங்களை கைவிடவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் வொல்க்கெர் டேர்க் இதனைத் தெரிவித்துள்ளார்.

பலவீனப்படுத்தும் கடன் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியன இலங்கையில் பொதுமக்கள் அடிப்படைப் பொருளாதார சமூக உரிமைகளைப் பெறுவதை...



02 பக்கம்

## ஊழியர் பற்றாக்குறை; போக்குவரத்து பாதிப்பு

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தற்போது ரயில் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் நாளாந்த ரயில் சேவைகள் சில இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பற்றாக் குறையால் இ.போ.ச ஊடாக அதிகபட்ச சேவையை வழங்குவதிலும் இடையூறு ஏற்பட் டுள்ளது.

இதனால் தமது நாளாந்த பொதுப் போக்குவரத்தை...

02 பக்கம்

## இலங்கையின் கடன் நிவாரண நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு

### உலக வங்கி அறிவிப்பு

THE WORLD BANK

இலங்கையின் கடன் நிவாரண நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சர்வதேச கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் முன்னேற்றத்தை வரவேற்பதாக உலக வங்கியின் பிரதித் தலைவர் மார்ட்டின் ரைசர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

மக்களை பாதுகாப்பதற்கும் பொருளாதாரத்தை மீட்பதற்குமான முக்கிய சீர்திருத்தங்களை...

02 பக்கம்

## அசாதாரணமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் மக்கள் வங்கி தொடர்ந்தும் மீளெழுச்சி நிலையில்

மக்கள் வங்கி டிசம்பர் 31, 2022 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான தீர்மானங்களை அறிவித்தது. அதன் அடிப்படையில் மொத்த ஒருங்கிணைந்த வருவாய், மொத்த இயக்க வருமானம் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் ஆகியவை முறையே ரூ.391.2 பில்லியன், ரூ.130.0 பில்லியன் மற்றும் ரூ.26.7 பில்லியன் காணப்பட்டது. (இது 2021இல் முறையே: ரூ.236.8 பில்லியன், ரூ.110.7 பில்லியன் மற்றும் ரூ.37.2 பில்லியன் ஆகும்).



மதிப்பாய்வுக்கு உட்படும் ஆண்டில் நடைமுறையில் இருந்த அசாதாரணமான அதிக வட்டி வீதத்தால் சூழலை முதன்மையாக பிரதிபலிக்கும் வகையில் ஒருங்கிணைந்த வட்டி வருமானம் 58.0வீதத்தால் அதிகரித்து, 351.4 பில் லியனை எட்டியது. அதேவேளை, வட்டி வருமானம் 107.05 வீதத்தால் அதிகரித்து ரூ.260.4 பில்லியனை எட்டியது. கடனுடன் ஒப்பிடுகையில்...

02 பக்கம்

# பல்கலைக்கழக பகுதிக்குள் மாணவர்கள் மீது தாக்குதல்

## கல்விமான்கள் கடும் கண்டனம்

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைங்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மார்ச் ஏழாம் திகதி கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான வன்முறைத் தாக்குதல்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட சட்ட ஆசிரியர்களான நாங்கள் கண்டிக்கின்றோம்.

பொலிஸாரும் கலக தடுப்புப் பொலிஸாரும் கண்ணீர்ப்புகையை பயன்படுத்தி மேற்கொண்ட அந்தத் தாக்குதல் காரணமாக பல மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அதேவேளை, இந்தத் தாக்குதல் காரணமாக பல்கலைக்கழகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை காணப்பட்டது.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நிலைநாட்டுவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளவர்கள் என்ற அடிப்படையில் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

நியாயபூர்வமான கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான பகுதி என பல்கலை வளாக பகுதிக்கு காணப்படும் உரிமை மீறப்பட்டதையும் நாங்கள் கண்டிக்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.

# ஊடகர் நிர்ஷனின் தந்தை காலமானார்



'தமிழன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் நிர்ஷனின் தந்தை கோவிந்தசாமி இராமானுஜம் (வயது 74) ஓய்வுபெற்ற பிரதான குமாஸ்தா நேற்று (08.03.2023) அதிகாலை இறக்குவானை இல்லத்தில் காலமானார்.

அவர் யசிதரன் மற்றும் நிர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாவார். பூதவுடல் நிவ்லேண்ட், பொத்துபிட்டிய வீதி, இறக்குவானையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30இற்கு இறுதிக்கிரியை நடைபெற்று மாலை 5 மணிக்கு பெல்மதுளை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படவுள்ளது.

தகவல் - நிர்ஷன் - 0741388618

# முறையற்ற வரிக்கொள்கைக்கு எதிராக இன்றுமுதல் தொழிற்சங்க நடவடிக்கை

## தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு தீர்மானம்

அரசாங்கத்தின் முறையற்ற வரிக்கொள்கைக்கு எதிராக இன்று (09) முதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை தொடர்ச்சியாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கங்கள் தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இதேவேளை, ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கத்தினரால் நேற்றுக் காலை 6.30 முதல் இன்று (09) காலை 6.30 வரை பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை இரத்துசெய்தமை உள்ளிட்ட சில விடயங்களை முன்வைத்து, ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கத்தினர் அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மருந்தாளர்கள், கதிரியக்க நிபுணர்கள், தாதி உதவியாளர்கள், அம்பியூலன்ஸ் சாரதிகள் உள்ளிட்ட கனிஷ்ட நிலை சுகாதார ஊழியர்களே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும், நேற்றைய பணிப்பகிஷ்கரிப்பில் வைத்தியர்களும் தாதியர்களும் கலந்துகொள்ளவில்லை.

# யாழில் ஆட்டிறைச்சியால் உயிரிழந்த பெண்

மார்பு குருதிக்குழாயில் ஆட்டிறைச்சி எலும்பு சிக்கிக்கொண்டதால் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த லோகேந்திரகுமார் மேரி ஜெனிஸ்ரா (வயது 46) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி இந்தப் பெண் ஆட்டிறைச்சி சாப்பிட்டார். இதன்போது எலும்பு தொண்டைக்குள் சிக்கியுள்ளது. இதையடுத்து, எலும்பு உள்ளே செல்வதற்காக வாழைப்பழம் சாப்பிட்டார். தொண்டையில் சிக்கிய எலும்பு, மார்பு வரை இறங்கியுள்ளது. மறுநாள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அவரது வாய் ஊடாக கெமரா செலுத்தி ஆராய வைத்தியர்கள் முற்பட்டனர். எனினும், அதற்கு அனுமதிக்காத அந்தப் பெண், வீடு திரும்பிவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை குருதி வாந்தி எடுத்தார். உடனடியாக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பின்னர் அவரது உடலில் கெமரா செலுத்தப்பட்டு பரிசோதித்தபோது, ஆட்டிறைச்சி எலும்பு குருதிக்குழாயில் குத்தியதாலேயே குருதி வாந்தி ஏற்பட்டதென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# இந்திய கடன் வசதியை ஆண்டு இறுதிவரை நீடிக்க நடவடிக்கை

பல மாத காலத்திற்கு வழங்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் இந்திய கடன் வசதியை இந்த ஆண்டு இறுதிவரை நீடிக்க, இந்தியாவுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு வழங்கப்பட்ட கடன் வசதி இந்த ஆண்டு மார்ச் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதுவரை பெறப்பட்ட கடன் வசதியில், மூன்றில் இரண்டு பங்கு மருந்து மற்றும் உணவுக்காக இலங்கை பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### எரிபொருள் கோட்டா...

மேலும் எரிபொருள் ஒதுக்கீட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று அமைச்சர் கூறுகிறார்.

### ரணிலுக்கான...

காரணங்களால் இவ்வாறு ஜனாதிபதிக்கான ஆதரவை மீளப்பெற பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக அம்பாறை மாவட்ட எம்.பி. விமலவீர திசாநாயக்க ஜனாதிபதிக்கான ஆதரவை விலக்கி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்துள்ளார். இது தொடர்பில் அவர் பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களை அறிவுறுத்தியுள்ளார். இதேபோல் மேலும் பல எம்.பிக்கள் அடுத்தடுத்து எதிர்க்கட்சி வரிசையில் அமரலாமென தெரியவருகிறது.

### முக்கிய பொருட்களின்...

நேற்று நள்ளிரவுமுதல் விலைக்குறைப்பு அமுலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளை சீனி மற்றும் பருப்பு விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதாக புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ சீனி 30 ரூபாவினாலும் ஒரு கிலோ பருப்பு 40 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

### தபால்மூல...

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளூடாக வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### பேரீச்சம்பழ...

வெளிநாடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள், நலன்விரும்பிகள் ஆகியோரிடமிருந்து அன்பளிப்பாகவோ நன்கொடையாகவோ பெறுவதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்கே இந்த வரி விலக்கு பொருந்தும் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

### ஊழியர் பற்றாக்குறை...

பயன்படுத்த முடியாத பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ரயில் சாரதிகளின் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு ஓய்வுபெற்ற சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள பொதுச் சேவை ஆணைக்குழு நேற்றுமுன்தினம் (07) அனுமதி வழங்கியதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் கனிஷ்ட ஊழியர்களுக்குரிய அரச பொருளாதார செயலணிக்காக 2 ஆயிரத்து 800 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இ.போ.சவுக்கு சாரதிகள் மற்றும் நடத்துநர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சேவையில் இணைத்துக்கொள்ள நிதி அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

### கர்ப்பிணித் தாய்மார்களுக்கான...

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பணவீக்கம் அதிகரித்துவரும் இந்நேரத்தில் இதுபோன்ற சலுகைக் குறைப்பு ஏற்புடையதல்ல எனவும்,சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த மானியத்தை வழங்குவதற்கு மாதாந்தம் 675 - 700 மில்லியன் ரூபா செலவாகுவதாகவும், இது வருடாந்தம் 8 பில்லியன் ரூபாவாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போது ஏழு மாவட்டங்களில் 2 வயதுக்குட்பட்ட ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் குழந்தைகளுக்கு 6,750 ரூபாவை யுனிசெப் வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்த 4,500 ரூபா கொடுப்பனவை நாட்டிலுள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மகளிர் தினத்திலிருந்தேனும் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

### மின் கட்டணத்தை...

தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர,

எதிர்க்கட்சித் தலைவர் தவறான கேள்வியை எழுப்பினார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடும் ஆட்சேபனைக்கமைவாக அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக அவர் கூறினார். இது பெரும்பான்மையான உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டது. ஒரு உறுப்பினரின் ஆட்சேபனையை முழு ஆணைக்குழுவின் ஆட்சேபனை என்று விவரிப்பது தவறு.

பொது பயன்பாட்டு ஆணைக்குழு என்பது ஒரு தனிநபர் அல்ல. அதில் ஐந்து பேர் உள்ளனர். மின்சார சபையின் இழப்பை ஈடுகட்ட கட்டணம் உயர்த்தப்படவில்லை. மின்சார உற்பத்தித் திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்த வேண்டும்.

மின்சார சபை ஊழலை குறைக்க ஆலோசனைகளை வழங்குகிறோம். ஆனால், அதற்கு எதிராக சிலர் செயல்படுகின்றனர். சில தொழிற்சங்க நிர்வாகிகள் அரசாங்கத்தின் திட்டங்களை குழப்புகின்றனர்.

இன்று தடையில்லா மின்சாரம் வழங்கி வருகிறோம். மின்வெட்டு நிறுத்தப்பட்டது. எமது உற்பத்தித் திட்டம் மாற வேண்டும். இந்தக் கட்டணம் வசூலிப்பதால், தொடர்ந்தும் மின்சாரம் வழங்க முடிந்தது. இந்த மின் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்போது, டிசம்பருக்குள் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும். முடிந்தால், ஜூலையில் குறைக்கப்படும்.

மின்சார சபையின் மறுசீரமைப்புத் திட்டம் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். அந்தத் திட்டத்திற்கு உங்கள் ஆதரவை தாருங்கள். அப்போது ஜூலை மாதத்திற்குள் மின்கட்டணத்தைக் குறைக்கலாம் - என்றார்.

### இலங்கையின்...

செயற்படுத்துவதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்கால சவால்களில் இலங்கையின் பின்னடைவை இது வலுப்படுத்தும் எனவும் உலக வங்கியின் பிரதித் தலைவர் கூறியுள்ளார்.

கடன் மறுசீரமைப்புக்கு சீனா எழுத்து மூலமாக இணங்கியுள்ள நிலையில் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

### கொடூர பாதுகாப்பு...

மட்டுப்படுத்தியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

மீட்புக் கொள்கைகள் சமத்துவமின்மைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும், வெளிப்படைத்தன்மை, ஆட்சியில் பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமாக வேருன்றியுள்ளதண்டனையின்பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஆகியவற்றை முடிவிற்கு கொண்டுவர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொடுரமான பாதுகாப்புச் சட்டங்கள் பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூகத்தினரை துன்புறுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தொடர்பான நேர்மையான முழுமையான நிலைமாற்று நீதி செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு தனது அலுவலகம் தயாராவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### அசாதாரணமான...

தவணை வைப்புகளின் துரித மீள்விலையிடல் வேறுபாட்டினை இது காட்டுகிறது. கடன்கள் பொதுவாக தொழில்துறை முழுவதும் காணப்படுவதுபோல், மக்கள் வங்கியிலுள்ள பெரும்பாலான தவணை வைப்புத்தொகைகள் 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான முதிர்வுகளுடன் காணப்பட்டன. மேலும், அதன் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் பிரிவுகளைப் பாதுகாப்பதற்காக வங்கியும் குழுவும் தங்கள் வட்டி விலையை அதிகரித்தன. கடன்களின் மறு விலையை தாமதப்படுத்துவதன் மூலமாகவோ அல்லது ஒத்திவைப்பதன் மூலமாகவோ வட்டிச் செலவு அதிகரிப்பின் பெரும்பகுதியை ஏற்றுக்கொண்டன. இவை கூட்டாக ஒருங்கிணைந்த நிகர வட்டி எல்லைகள் 6.0 % ஆல் குறைந்து ரூ. 91.0 பில்லியனாக (2021: ரூ. 96.9 பில்லியன்) காணப்பட்டன.

வங்கியின் நிதியல்லாத வருமானம் 2022ஆம் ஆண்டில் அதன் மொத்த இயக்க வருமானத்தில் 30.0% (2021: 12.5%) ஆகும், இது ஒருங்கிணைந்த நிகர கட்டணங்களில் 81.1% அதிகரிப்பு மற்றும் ரூபா மதிப்பிழப்பால் எழும் அசாதாரண தாக்கத்தால் ஏற்பட்டது. வங்கியின் தனிப்பட்ட அடிப்படையில் கட்டணங்களில் ஏதேனும் ஒரு முறை அதிகரிப்பதைத் தவிர்த்து, வளர்ச்சியானது 26.1% ஆக வலுவாக இருந்தது. இது இறுதியில், நிலையற்ற வட்டி விகிதச் சூழலிலும், நிதியில்லாத வருமான ஆதாரங்களை ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து மேம்படுத்துவதற்கான வங்கியின் தொடர்ச்சியான முயற்சியைக் காட்டுகிறது.

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் உயர் பணவீக்க அழுத்தங்களைப் பிரதிபலிக்கும் வகையில், 70.0% ஆக உயர்ந்த நிலையில், மொத்த ஒருங்கிணைந்த இயக்கச் செலவுகள் 16.9 % ஆல் அதிகரித்து ரூ. 59.0 பில்லியன் (2021: ரூ. 50.5 பில்லியன்) ஆக இருந்தது. வினைத்திறனான செலவுக் கட்டுப்பாடு மற்றும் செயல்திறன் மேம்பாடுகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான முறையில் வங்கி செயற்படுத்தியுள்ளதை இது பிரதிபலிக்கிறது. பெரும்பாலான கூட்டாளர்களுடனான நடவடிக்கைகளுடன் ஒப்பிடப்படும்போது இது நன்றாகவே இருந்தது. வங்கியும் குழுவும் பல வரம்புக்குட்பட்ட சூழ்நிலைகள் இருந்தபோதிலும் கிட்டத்தட்ட 2021இனைப் போலவே வருமான விகிதங்களுக்கான செலவை வெற்றிகரமாக பராமரிக்க முடிந்தது.

வாடிக்கையாளர் பொறுப்பு மீறல் மற்றும் கடன் செலவுகளைப் பொறுத்தமட்டில், வங்கி அதன் அனைத்து வாடிக்கையாளர்களின் அழுத்த நிலைகளையும், மிக முக்கியமாக அதன் பெரிய முக்கிய பிரிவுகளையும் மதிப்பிட்டு, அவற்றை முன்கூட்டியே மற்றும் விவேகமான அடிப்படையில் நடைமுறைப்படுத்தியது. அதன் பயனாக, வெளிவாரியான கடன் மறுசீரமைப்புக்கு உட்பட்ட வெளிநாட்டு நாணய முதலீடுகளுக்கு வங்கியின் வெளிப்பாடு, டிசம்பர் 31, 2022 அன்று மொத்தமாக 51.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே செலவிடப்பட்டது.

மொத்த வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகை 13.0%ஆல் அதிகரித்து ரூ. 2,450.1 பில்லியனை எட்டியதுடன், மொத்த ஒருங்கிணைந்த கடன்கள் 3.8%ஆல் அதிகரித்து ரூ. 1915.8 பில்லியனை எட்டியது, இது வங்கி மற்றும் குழுவின் விவேகமான கடன் வளர்ச்சி மற்றும் பேரின பொருளாதார பொறிமுறை என்பவற்றிற்கான சரியான அணுகலைப் பிரதிபலிக்கிறது. 2021இல் மொத்த ஒருங்கிணைந்த சொத்து 10.6% ஆல் அதிகரித்து ரூ. 3.0 டிரில்லியனைத் தாண்டி ரூ. 3,133.1 பில்லியனை எட்டியது.

வங்கியின் அடுக்கு I மற்றும் மொத்த மூலதனப் போதுமான அளவு விகிதங்கள் முறையே 11.9% மற்றும் 16.3% (2021 இறுதியில்: 12.6% மற்றும் 17.8%) ஆக இருந்தன. அதே சமயம், ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில், இது முறையே 13.3% மற்றும் 17.2%, (2021 இறுதியில் 13.4% மற்றும் 17.9%) ஆக இருந்தது. ஜூலை 1, 2017 அன்று பாசல் III நடைமுறைக்கு வந்ததிலிருந்து அதன் ஒழுங்குமுறை மூலதனத்தைப் பெருக்குவதற்கான அதன் முயற்சிகளை வங்கியின் உறுதியான கடனீட்டு நிலைகள் ஊடாக பிரதிபலிக்கின்றது. மேலும், வங்கி அனைத்து முக்கிய ஒழுங்குமுறை நடவடிக்கைகளையும் டிசம்பர் 31, 2022இல் எந்த விதிவிலக்கு அல்லது நிவாரணமும் இல்லாமல் பின்பற்றியது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ வங்கியின் பிரதிபலன்கள் குறித்து கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

“ஒரு பேரின பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும்போது, 2022 கடந்த பல ஆண்டுகளையும் விட பொருளாதார அழுத்தங்கள் மற்றும் அழுத்த நிகழ்வுகளின் உச்சக்கட்டமாகும். நாட்டின் வெளியக கையிருப்பு முன்னெப்போதும் கண்டிராத அளவிற்கு வீழ்ச்சியடைந்தது, ரூபா மதிப்பு 80.0% இற்கு அருகில் சரிந்தது, பணவீக்கம் ஏறக்குறைய 70.0%ஆக உயர்ந்தது, பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விகிதங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்தன. மொத்தத்தில், நாட்டின் கடன் மதிப்பீடு வரலாறு காணாத அளவிற்கு வீழ்ச்சியடைந்து பொருளாதாரம் 11.0% ஆல் சுருங்குகிறது, இது சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட மிக மோசமான சரிவாகும்.

எனவே, 2022 ஆம் ஆண்டு, வங்கியின் மேல்நிலை அல்லது கீழ்நிலை மீது முக்கிய கவனம் செலுத்தும் ஆண்டாக இருக்கவில்லை, ஆனால் அவற்றின் முழுமையான தேவை எழுந்த நேரத்தில் வாடிக்கையாளர் நலன்களைப் பாதுகாத்தல், திரவத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த இடர் மேலாண்மை மற்றும் அதன் நீண்ட கால நிலைத்தன்மைக்கான நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் ஊடாக செயற்படுத்தத்தக்கதாகும். சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது என்பதே வங்கியின் அனைத்து உரையாடல்கள் மற்றும் முடிவுகளின் மையமாக இருந்தது. ஒரு பொறுப்பான அரச நிறுவனமாக வங்கியின் மீது சுமத்தப்படும் கூடுதல் சுமை உட்பட இந்த அனைத்துச் செயற்பாடுகளிலும் எமது 2022 பிரதிபலன்கள் அளவு மற்றும் மிக முக்கியமாக, ஒரு தரமான முன்னணியில் உள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் நிரூபித்ததைப் போன்றே நாம் எதிர்காலத்தை எதிர்நோக்குகிறோம். வங்கியின் ஒட்டுமொத்த செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்தையும் வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதேவேளை, சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டிற்கு சேவை செய்வதில் முன்னணியில் இருப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எனது சக சபை உறுப்பினர்களின் வழிகாட்டுதல் மற்றும் புத்திசாலித்தனமான ஆலோசகர்கள், ஓய்வுபெற்ற மற்றும் தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரி ,பொது முகாமையாளர் மற்றும் முழு நிர்வாகக் குழுவின் தலைமை மற்றும் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களின் அயராத முயற்சிகளுக்காக நான் நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். முக்கியமாக, எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு நிறுவனம் மீது தொடர்ந்து நம்பிக்கை மற்றும் உறுதியை அளித்தமைக்காக அவர்களுக்கு நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில்:

“நாட்டின் பொருளாதார நல்வாழ்வில் ஆழமாக வேரூன்றிய எந்தவொரு நிறுவனத்தையும் போலவே, நாட்டின் அதிர்ஷ்டத்திற்கு ஏற்ப, 2022ஆம் ஆண்டு எமது நிறுவனத்திற்கும் பிரதிபலன் குறைந்த ஆண்டாகும். எவ்வாறாயினும், அத்தகைய வரம்புக்குட்பட்ட சூழ்நிலைகளை முறையாகத் தீர்ப்பதன் மூலம் குறித்த இடைவெளிகளை உடனடியாகத் குறைத்து வலுவாக வெளிப்படும் நமது திறன்தான் நம்மை வரையறுக்கிறது. 2022இனைப் பொறுத்தவரை இந்த கடினமான காலங்களில் வங்கியின் வணிகமானது எமது மிகவும் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர்களின் நீண்டகால நல்வாழ்வுக்காக வட்டி நட்டம் மற்றும் செலவினம் மற்றும் பல்வேறு அம்சங்களை வலுப்படுத்தும் திறன் ஆகியவற்றில் நாட்டிற்கு அதன் முழுமையான தேவை ஏற்பட்ட சந்தர்ப்பத்தின்போது எமது பங்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நமது முன்னோக்கிச் செல்லும் பாதை தெளிவாக உள்ளது. முன்னோக்கிப் பார்க்கையில், எங்களின் 900இற்கும் மேற்பட்ட உலகளாவிய தரப்பு உறவுகளை மேம்படுத்துதல், உள்ளூர் நாணயம் மற்றும் வெளிநாட்டு நாணயம் என எமது வைப்புகளை மேலும் வலுப்படுத்துதல், அதிக பன்முகத் தன்மையை உருவாக்குவதை மையமாகக் கொண்டு கடன் விரிவாக்கத்தில் கூடுதல் விழிப்புடன் செயல்படுதல் உள்ளிட்ட நமது நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த முயற்சிப்போம். எமது வெளிப்பாடுகள் மற்றும் சமமான நடத்தை, முக்கியமாக இந்த காலங்களில், அதிக நிலுவைத் தொகைகளை நெருக்கமாகக் கண்காணிப்பதை உறுதிசெய்து, மேலும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது உட்பட சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு குறைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதைத் தொடர்ந்தும் மேற்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம்.”

மக்கள் வங்கியானது 745 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக்கொண்ட இலங்கையின் மிகப்பெரிய வங்கித் தடம் கொண்ட நாட்டின் முன்னுரிமை வாய்ந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும். 61 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட 14.7 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கும் 19.0 மில்லியனுக்கும் அதிகமான கணக்கு தொடர்புகளுக்கும் அயராது மற்றும் விடா முயற்சியுடன் சேவை செய்யும் 7,300 இற்கும் அதிகமான ஊழியர்களின் சேவையால் செயற்படும் நாட்டின் எந்த சேவை வழங்கும் நிறுவனத்தை விடவும் பாரிய நிறுவனமாகும்.

# மின்கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஊடகர்கள் - போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்





(கலஹா நிருபர்)

கம்பளை குறுந்துவத்தை நகரில் அரசாங்கத்தின் மின்கட்டண விலைவாசி உயர்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற தீப்பந்தப் போராட்டக்காரர்கள் மீதும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீதும் பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பாக குறுந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் இரு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (07) இரவு இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி தீப்பந்தப் போராட்டம் குறுந்துவத்தை நகரில் பொருளாதார மத்திய நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இதன்போது அங்கு மது போதையுடன் காணப்பட்ட பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் குழுவினர் போராட்டக்காரர்களை நோக்கி கூச்சலிட்டும் நீரை பாய்ச்சியும் குழப்பம் விளைவித்துள்ளனர்.

அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் முகத்திலும் கெமரா மீதும் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, குறுந்துவத்தை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மேற்படி சம்பவத்தினையடுத்து கம்பளை பிரதேச ஊடகவியலாளர்களை சட்டத்தரணி எதுகலவும் நாவலப்பிட்டி ஊடகவியலாளர்களை சட்டத்தரணி துஷாரி ஜயசிங்கவும் பாதுகாப்புடன் கொண்டுசேர்த்துள்ளனர்.

இது தொடர்பாக போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளராலும் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக குறுந்துவத்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு குறித்து இன்றும் நாளையும் இரண்டு நாள் விவாதம்



உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான இரண்டு நாள் விவாதம் இன்றும் (9) நாளையும் (10) நாள் முழுவதும் நடைபெறவுள்ளது.

இந்த முன்மொழிவை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் விவாதம் நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் நாடாளுமன்ற நிலையியற் குழுவில் கோரிக்கை விடுத்தார். அதன்படி இரண்டு நாள் விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்,து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இரண்டு நாட்களாக நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணொருவர் மீது அசிட் வீசிய முன்னாள் இராணுவச் சிப்பாய் கைது

பண்டாரவளை - எலபெத்த கும்புர தகுன கெபிலேவெல பகுதியில் பெண் ஒருவர் மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்திய முன்னாள் இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அசிட் வீச்சு தாக்குதலுக்குள்ளான பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த இராணுவ பொறியியலாளர் பிரிவில் கடமை புரிந்து, தற்போது இராணுவத்திற்கு செல்லாது தலைமறைவாகி இருந்த 23 வயதுடைய இளைஞனே காதலியின் தாய் மீது இந்த அசிட் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அசிட் தாக்குதலுக்கு இலக்கான பெண்ணின் தாய் பதுளை வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருவதோடு, குறித்த பெண்ணுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இதையடுத்து 23 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் பண்டாரவளை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த சந்தேக நபரை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கஞ்சாவுடன் இருவர் கைது

அத்திமலை மற்றும் ஹம்பேகமுவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கிலோ 820 கிராம் கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டியாகல கேகலான பிரதேசத்தில் 970 கிராம் கஞ்சா வைத்திருந்த அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரும், ஹம்பேகமுவ தஹயாகல பிரதேசத்தில் 850 கிராம் கஞ்சா வைத்திருந்த அதே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரும் நேற்று முன்தினம் (07) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை சியம்பலாண்டுவ மற்றும் வெல்லவாய நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# பெண்களுக்கு உரிய இடத்தை வழங்க பாராளுமன்றத்திலிருந்தே ஆரம்பிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



மனிதகுலத்தின் நிலையான இருப்பு ஒரு வலுப்பெற்ற பெண் ஆளுமையைப் பொறுத்தே அமைவதாகவும், இந்நாட்டில் பெண்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் அவர்களுக்கு உரிய இடத்தைப் பெற்றுக்கொடுக்கும் கௌரவம் காலம் காலமாக இருந்துவருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளில் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு பெண்கள் பெரும்பான்மையாக இருந்தாலும், நமது நாட்டில் அரசியல் பிரதிநிதித்துவத்தில் கிட்டத்தட்ட 5 சதவீத பெண்களே உள்ளதாகவும், அரசியல்வாதிகள் மீது அதிருப்தி நிலவும் இக்காலத்திலும் கொள்கை வகுப்பில் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று (நேற்று 08) அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# குளிர்பானத்தில் விஷம் கலந்து தனது பிள்ளைகள் மூவருக்கும் கொடுத்து தானும் நஞ்சருந்திய தந்தை

## கம்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பு



நபர் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் நஞ்சை கொடுத்துவிட்டு தானும் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்ற நிலையில், கம்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கம்பளை தெல்பிட்டிய செவனக் கிராமத்தில் நேற்று முன்தினம் (07) இரவு இடம்பெற்ற மேற்படி சம்பவத்தின்போது 4 வயது ஆண் பிள்ளையும் 7 மற்றும் 13 வயதுகளையுடைய இரு பெண் பிள்ளைகளும் குறித்த பிள்ளைகளின் தந்தையான 40 வயது நபருமே நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கணவன் - மனைவிக்கிடையே நீண்ட நாட்களாக குடும்பப் பிரச்சினை இருந்து வந்ததாகவும் சம்பவ தினம் மனைவி வீட்டிலிருந்து வெளியேறி இருந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவதினம் இரவு 10 மணியளவில் வீட்டுக்கு வந்த குறித்த நபர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் தெரியாமல் குளிர்பானத்தில் நஞ்சை கலந்து குடிக்குமாறு கூறிவிட்டு, தான் தனது அறைக்குச்சென்று மதுபானத்துடன் நஞ்சை கலந்து அருந்தியுள்ளாதாக தெரிய வருகிறது.

இந்நிலையில், தனது தந்தையும் தம்பியும் தங்கையும் தொடர்ந்து வாந்தியெடுத்துக் கொண்டிருந்ததை அவதானித்த 13 வயது சிறுமி இது குறித்து அயலில் வசித்த தனது பெரியப்பாவிடம் (தந்தையின் அண்ணன்) தெரிவித்ததையடுத்து பிரதேசவாசிகளுடன் இணைந்து நால்வரையும் கம்பளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு நஞ்சை அருந்தக் கொடுப்பதற்கு முன்னர் முன்பு எடுத்த பழைய புகைப்படங்களை குறித்த நபர் வெகுநேரமாக பார்த்துக்கொண்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் கொழும்பு துறைமுகத்துக்கு வந்த 17 கப்பல்கள் திரும்பிச்சென்றன

## கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



துறைமுக தொழிற்சங்கங்களின் போராட்டம் காரணமாக கொழும்பு துறைமுகத்திற்கு வந்த 17 கப்பல்கள் திரும்பிச் சென்றதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்களை மீண்டும் துறைமுகத்துக்கு கொண்டுவருவதற்கு தாம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அவர்களில் சிலரை மாத்திரமே தன்னால் மீளக் கொண்டுவர முடிந்ததாகவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

“கப்பல்களை மீண்டும் துறைமுகத்திற்கு கொண்டுவர கப்பல் முகவர்களுடன் ஆலோசித்தேன். ஆனால், அவற்றில் சிலவற்றை மட்டுமே கொண்டுவர முடிந்தது” என்றார்.

துறைமுக ஊழியர்களின் போராட்டங்களால் கொழும்பு துறைமுகத்தின் வர்த்தகம் இந்தியா, டுபாய் மற்றும் சிங்கப்பூர் போன்ற அருகிலுள்ள துறைமுகங்களுக்கு திசைதிருப்பப்படுவதையே ஏற்படுத்தும் என அமைச்சர் கூறினார்.

துறைமுக ஊழியர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினால், நமது துறைமுகம் இடிந்துவிழும் அதேவேளை, நமக்கு நெருக்கமான நாடுகளில் உள்ள துறைமுகங்கள் செழிக்கும்.

துறைமுக ஊழியர்கள் ஏனைய ஊழியர்களைப்போல் அல்ல. அவர்களுக்கு மாதச் சம்பளம் ஒரு இலட்சத்து 71 ஆயிரம் ரூபா, மூன்று வேளை உணவு இலவசம் மற்றும் விசேட கொடுப்பனவுகளும் கிடைக்கின்றன.

# அம்பலாந்தோட்டையில் 7 மணிநேர நீர்வெட்டு

(பேருவளை பி.எம்.முக்தார்)

அம்பலாந்தோட்டை நீர் வழங்கல் திட்டத்திற்குட்பட்ட மிரிஜ்ஜவில நீர்த்தாங்கி மூலம் நீர் விநியோகிக்கப்படும் குழாயில் அத்தியாவசிய திருத்த வேலைகள் காரணமாக இன்று 09ஆம் திகதி மு.ப. 9 மணிமுதல் பி.ப. 4 மணிவரையிலான 7 மணிநேர நீர் விநியோகத் தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

மிரிஜ்ஜவில, சிசிலசகம, கொயம் கொலமுல்ல, அவஸ்கோன் வீதி, சித்ராகல, கஜுகெவிபல வீதி, ஓசியஸ் வீதி, சமகி மாவத்தை, கொடவாய, ரொட்டவெல, நவகம்கொட, ரொட்டலவெவ, கப்புவத்தை, லேவாய, கிரேண்ட்ஹில்லா ஹோட்டல் வீதி, மானச்சா, ஹுணுகொட்டுமுல்ல வீதி, துறைமுக உள்ளக பிரதேசங்கள் மற்றும் தர்மபால மாவத்தை ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட பல்கலை மாணவர் சுலக்சனின் சிராத்த தினம் சுன்னாகத்தில் அனுஷ்டிப்பு





2016ஆம் ஆண்டு பொலிஸாரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் சுலக்சனின் 31ஆவது பிறந்தநாள் நினைவு நேற்று (08) அனுஷ்டிக்கப்பட்டது.

2016.10.21ஆம் திகதி இரவுவேளை வீடு திரும்பிக்கொண்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களான வி.சுலக்சன், ந.கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டனர்.

அவர்கள் படுகொலைசெய்யப்பட்டு 7 வருடங்கள் நிறைவடைந்தும் இன்னும் படுகொலையானவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், படுகொலைசெய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் 31ஆவது பிறந்த தின நினைவு நேற்று (08) அனுஷ்டிக்கப்பட்டது.

சுன்னாகத்தில் மாணவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட பயணிகள் தரிப்பிடத்தில் பிறந்தநாள் நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாணவர் சுலக்சனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

இதன்போது மாணவர் சுலக்சனின் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை**

- **மேஷம்**: நினைத்த காரியத்தை சாதிப்பீர்கள், நோய், கடன் நிவர்த்தி, எதிரிகள் பணிவாக நடந்துகொள்வார்கள்.
- **ரிஷபம்**: உங்கள் மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள், உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.
- **மிதுனம்**: குடும்பத்திலுள்ளவர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், உணர்வுகளை வெளிப்படுத்தத் தவிப்பீர்கள்.
- **கடகம்**: கும்பிட்டுக் கூத்தாடியாவது உங்கள் காரியங்களைச் சாதிப்பீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.
- **சிம்மம்**: பேசுவதைவிட மௌனமாக இருப்பதே மேல், கொடுத்த பணம், கொடுத்த வாக்கை காப்பாற்ற முயற்சிப்பீர்கள்.
- **கன்னி**: எதிர்பாராத நண்பர் சந்திப்பால் இலாபங்கள் உண்டு, உடல், மனம் இரண்டுமே சிறப்பாக இருக்கும்.
- **துலாம்**: செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், தேவையற்ற விவகாரங்களில் தலையிட வேண்டாம்.
- **விருச்சகம்**: தொழிலில் எதிர்பார்த்த வரப்பிரசாதங்கள் கிடைக்கும், கைவிட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும்.
- **தனுசு**: தொழில் வியாபாரங்கள் சிறக்கும், சமுகத்தில் உங்கள் கீர்த்தி செல்வாக்கு உயரும்.
- **மகரம்**: நண்பர், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு, உங்கள் திட்டங்கள் நிறைவேறும் நாள்.
- **கும்பம்**: வீண் பணம், பொருள் விரயங்கள் ஏற்படும், கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.
- **மீனம்**: காதல், திருமணம் கைகூடி வரும், பங்கு வியாபாரத்தில் நினைத்த இலாபத்தை அடைவீர்கள்.

**திதி** : துவிதியை பி.ப. 8.54 பின் திரிதியை

**நட்சத்திரம்** : அத்தம் பி.இ.5.56 வரை பின் சித்திரை

**யோகம்** :சித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.11.22 - 12.22 மணி வரை

**ராகு காலம்** : 1.52 - 3.22 மணி வரை

**எமகண்டம்** : 6.22 - 7.52 மணி வரை

**குளிகை** : 9.22 - 10.52 மணி வரை

**சந்திராஷ்டமம்** : கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : கார்த்திகை,உத்தரம்,உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : --------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று பத்தரமுல்லை தியத்த சந்திக்கு அருகில் பெண்கள் தமது உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது. (படங்கள் – லலித் பெரேரா)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மார்ச் 09ஆம் திகதி, வியாழக்கிழமை

# பொருளாதாரத்தில் வேண்டாம் அரசியல்!

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த சில நாட்களாக சடுதியாக உயர்வடைந்துள்ளதுடன், நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்றைய தினம் ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 331.05 ரூபாவாகவும், கொள்வனவு விலை 313.77 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதி மூலம் இலங்கைக்கு பல கதவுகள் திறக்கப்படும் என பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதியை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையுடனான இந்த ஒப்பந்தத்தில் நாங்கள் உடன்படுகிறோம் என அடுத்த முடிவாக சர்வதேச நாணய நிதியம் ஓர் அறிவிப்பை வெளியிடும். அதன் பிறகு முதல் தவணை வெளியாகும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சுமார் 350 மில்லியன் டொலர் பெறுவோம் என்று நினைக்கிறேன். சர்வதேச நாணய நிதியத்தின் பணம் வேறெங்கும் செல்ல முடியாது. இலங்கை மத்திய வங்கியின் கையிருப்புகளுக்கு நேரடியாக செல்கிறது. அவர்களின் கையிருப்பு அதிகரிக்கும்போது, எங்கள் கடன் வகைப்பாடு அதிகரிக்கிறது. அங்கிருந்து, நாம் பல கதவுகளைத் திறக்கலாம். அவை கடன் பணம் என்ற போதிலும் பணத்துடனான பல அலுமாரிகள் திறக்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் எங்களால் ஒரு ரூபா கடன் கூட வாங்க முடியாதென்ற சூழலில் கிடைக்கும் இந்தப் பணம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

மக்களுக்கும் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும். பொதுவாக டொலரின் விலை 300 ரூபாவுக்கு அருகில் வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்து இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பு உயர்வடைவதை அரசியல்பேதம் பாராது பாராட்டியுள்ளார் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. இதன்படி, இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 4.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகளின் பெறுமதி 2,217 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது ஜனவரி மாதத்தின் இறுதியில் காணப்பட்ட உத்தியோகபூர்வ கையிருப்பான 2,121 மில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகமாகும். இலங்கை மத்திய வங்கியின் தங்க கையிருப்பு கடந்த பெப்ரவரியில் 29 மில்லியன் டொலரில் இருந்து 28 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதார நிலைமைகளை எதிர்க்கட்சிகள் விமர்சிக்காமலும் இல்லை. ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதாக கூறுவது பொய்யானது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கைகள் முற்றிலும் பொருத்தமற்றவை எனவும், தேர்தலை நடத்துவதற்கு போதிய பணம் இல்லாத நாடாக இலங்கை இன்று மாறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள ரில்வின், ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதாக கூறுகின்றனர். ஆனால், அது பொய்யானது. திடீரென இதனை அரசாங்கம் கூறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில் எந்த வகையிலாவது டொலர் பெறுமதி குறைவதென்பது நல்ல விடயம் அல்லவா? அது எப்படி குறைகிறது, ஏன் குறைகிறது என்று பார்ப்பதுகூட ஒருவகை அரசியல்தான். மக்கள் வரிசைகளில் நிற்பதை விரும்பும், மக்கள் திண்டாடுவதை விரும்பும் தரப்பினர் தவிர்ந்த வேறெவர் இதனை கவலையுடன் பார்க்க முடியும்?

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தாலும் நாடு ஒரேயடியாக மீண்டெழ முடியாது. ஆனால், மீண்டெழ கதவுகளை அது திறக்கும். மீண்டு வரலாம் என்ற நம்பிக்கையைத் தரும் அந்த உதவியே இந்த நிமிடத்தில் முக்கியமானது. அதனை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்காமல் இருப்பதே நல்லது. பொருளாதாரப் பிரச்சினையால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புறும் சூழ்நிலையில், பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளை சகட்டுமேனிக்கு விமர்சிக்கக் கூடாது.

## இன்றைய நாளில்...

- 1945 – இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீச்சூறாவளியினால் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 – பார்பி பொம்மை நியூயோர்க் நகரில் அமெரிக்க அனைத்துலக விளையாட்டுப் பொருட்கள் கண்காட்சியில் முதன்முதலாகக் காட்சிக்கு வைக்கப்பட்டது.
- 1961 – சோவியத்தின் ஸ்புட்னிக்-9 விண்கலம் ‘இவான் இவானொவிச்’ என்ற மனிதப்போலியை வெற்றிகரமாக விண்வெளிக்குக் கொண்டு சென்றது. இதன் மூலம் சோவியத் ஒன்றியம் மனித விண்வெளிப் பறப்புக்குத் தயாரென அறிவித்தது.
- 1986 – சேலஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்கள் உள்ளே இருந்தன.
- 2006 – சனியின் துணைக்கோளான என்செலாடஸில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2011 – டிஸ்கவரி விண்ணோடம் தனது 39ஆவதும், கடைசியுமான பயணத்தை முடித்து பூமி திரும்பியது.

# ஜனநாயகத்தை நோக்கி

# அரசாங்கத்தை தள்ளும் உயர்நீதிமன்றம்!

பொருளாதாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதன்மையான இலக்காகக் கொண்டிருக்கும் பருநிலை உறுதிப்பாட்டை நோக்கிய நகர்வுக்கான அறிகுறிகளை காண்பிக்கத் தொடங்கியிருக்கிறது. இவற்றில் தெளிவாக காணக்கூடியதாக இருப்பது அமெரிக்க டொலருக்கும் ஏனைய சர்வதேச நாணயங்களுக்கும் எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பாகும். இந்த அதிகரிப்பு பெறுமதி குறைந்துகொண்டுவந்த முன்னைய போக்கில் இருந்து ஒரு மாற்றத்தை குறிக்கிறது.

கடந்த ஒரு வருடமாக உத்தியோகபூர்வ நாணயப் பரிமாற்ற வீதத்தில் டொலரின் பெறுமதி 80 சதவீதமளவுக்கு உயர்ந்தது. கறுப்புச் சந்தையில் இந்த வீதம் மேலும் கூடுதலானதாக இருந்தது. சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட மேம்பாடு உட்பட வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தில் காணப்படும் உயர்வே ரூபாவின் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகும். ஆனால், அந்த அதிகரிப்பு இன்னமும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வங்குரோத்து நிலை பிரகடனத்தின் விளைவாக வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துவதில் இடைநிறுத்தம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கிறது.

பெரிதும் தாமதமாகும் சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி டொலர்கள் கடனுதவி இறுதியில் வரவிருக்கிறது என்ற அரசாங்கத்தின் ஊர்ஜிதம் நம்பிக்கையை அதிகரிக்கும் ஒரு விடயமாகும். இதை விட உலக வங்கியுடனான நாணயப் பரிமாற்றத்தின் மூலம் 40 கோடி டொலர்களும் கிடைக்கவிருக்கின்றன. இவையெல்லாம் பொருளாதாரத்தின் நேர்மறையான நோக்கின் குறிகாட்டிகளாகும். பருநிலை உறுதிப்பாட்டை அடைவதற்கான அரசாங்கத்தின் மூலோபாயம் நாட்டுக்கு பயன்தரத் தொடங்கியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

ஆனால், பருநிலை பொருளாதார மீட்சி பரந்தளவில் சனத்தொகைக்கு பயனைத் தருவதாக இருக்கவேண்டுமேயன்றி உயர்ந்த வருமானம் பெறும் பிரிவினரின் ஏகபோகத்துக்குரியதாக அமைந்துவிடக்கூடாது என்பதை அரசாங்கம் மனதில் கொள்ளவேண்டும். சுதேச உள்ளீடுகள் மற்றும் பயன்விளைவுகளை அடிப்படையாகக்கொண்ட நிலைபேறான பொருளாதார மீட்சி முறைமையொன்றை முன்னெடுக்கவேண்டிய தேவை இருக்கிறது.

ஒரு நலன்வாய்ந்த சமூகமும் அதை அடைவதற்கான பொருளாதாரத் திட்டமும் அடிமட்ட மக்களைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும். கடந்த வார இறுதியில் நான் ஒரு மரணச்சடங்கில் கலந்துகொண்டேன். இறந்தவர் 80 வயதைத் தாண்டியவர் போன்று காணப்பட்டார். ஆனால், அவரின் உண்மையான வயது 63. மரணத்துக்குக் காரணம் புற்றுநோய். அவருக்கு புற்றுநோய் இருப்பதாக முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது அரசாங்க புற்றுநோய் வைத்தியசாலையில் கீமோதெரபி மருந்துகள் இருக்கவில்லை. பொருளாதார வசதி குறைந்த மக்களுக்காகவே அந்த வைத்தியசாலை இருக்கிறது.

இறந்தவர் மிகவும் உறுதியானவராக இருந்ததாகவும் நோயின் ஆரம்பத்தில் கீமோதெரபியுடன் அவரால் நலமாக இருந்திருக்க முடியும் என்றும் அவரின் குடும்பத்தவர்கள் கூறினர். பல மாதங்கள் கழித்து கீமோதெரபி மருந்துகள் கிடைக்கப்பெற்றபோது நோயாளி மிகவும் பலவீனமடைந்துவிட்டார். புற்றுநோயும் பரவிவிட்டது. பலவீனப்பட்டுவிட்ட அவரின் உடல், செறிவு கூடிய மருந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாததாகிவிட்டது. இறுதியில் குடும்பத்தினர் இழப்பை தாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

### முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் தயக்கம் இப்போது தெளிவாகத் தெரியவந்துவிட்டது. மேற்கூறப்பட்ட மரணத்தைப் போன்று எண்ணற்ற கதைகள் இருப்பதை அரசாங்கம் நன்றாக அறியும். கணிசமான பொருளாதார மீட்சி அறிகுறிகளை மக்களுக்குக் காண்பித்துவிட்டு தேர்தலுக்குப் போவதையே அரசாங்கம் விரும்பும். பெரும்பாலான வாக்காளர்கள் வசதியானவர்கள் அல்ல, வறியவர்களே. வசதியானவர்களை விடவும் வறியவர்களுக்கு இடர்பாடுகளைக் கொடுக்கின்ற ஒரு பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கவே அவர்கள் விரும்புவார்கள்.

அதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு 1000 கோடி ரூபாவை செலவிடுவதை விடவும் அதே பெறுமதியான அரிசியை மக்களுக்கு இலவசமாக கொடுக்க அரசாங்கம் விரும்பியிருக்கிறது. மக்கள் தங்கள் சொந்த சம்பாத்தியத்தில் வாழ்வதற்கு ஏதுவாக அவர்களை வலுவூட்டுவதற்கு அரசாங்கத்தின் உதவியில் தங்கியிருக்கும் கலாசாரத்தில் விடுபடவேண்டிய தேவை இருக்கிறது. தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட மார்ச் 9 அரசாங்கத்தைப் பொறுத்தவரை மிகவும் சீக்கிரமான திகதியாகும். அதனால் தேர்தல்கள் பின்போடப்படுவதை அது உறுதிசெய்தது.

2023 வரவு - செலவுத்திட்டத்தில் தேர்தல் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமல் தடுத்துவைக்கக்கூடாது என்று கடந்த வாரம் உயர்நீதிமன்றம் நிதியமைச்சின் செயலாளருக்கும் சட்ட மா அதிபருக்கும் இடைக்கால தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படமாட்டாது என்ற நிலைப்பாட்டிலிருந்து அவமானப்படாத முறையில் பின்வாங்குவதற்கான ஒரு வாய்ப்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கிறது.

நிதியமைச்சு உடனடியாகவே தேர்தல்களை நடத்துவதற்கு வசதியாக தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் விடுவிக்கும் என்றொரு அறிக்கையை வெளியிட்டது. தேர்தல்களுக்கான புதிய திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எடுக்கக்கூடிய தீர்மானத்துக்கு செவிமடுப்பதற்கு அரசாங்கத்துக்கு இப்போது வழி திறந்துவிடப்பட்டிருக்கிறது. புதிய திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்ப்பை வழங்குவதில் இதே போன்ற பிரச்சினையை கையாளவேண்டியிருந்த பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்று வசதியாக அமைந்திருக்கக்கூடும். நிதி வளங்கள் இல்லாமையால் மாகாண தேர்தல்களை நடத்தமுடியவில்லை என்று பாகிஸ்தான் அரசாங்கம் கூறியது. மாகாண சட்டசபைகள் கலைக்கப்பட்ட திகதியில் இருந்து 90 நாட்களுக்குள் தேர்தல்கள் இடம்பெறவேண்டும் என்று பாகிஸ்தான் நீதிமன்றம் காலக்கெடு விதித்தது.

நிதி இல்லை என்பதை காரணம் காட்டி தேர்தல்களைப் பிற்போட அனுமதித்தால் அது ஆபத்தான முன்னுதாரணம் ஒன்றை ஏற்படுத்திவிடும் என்று இலங்கையில் உள்ளதைப் போன்றே பாகிஸ்தானிலும் அக்கறை இருந்தது. பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் நிதி வளங்கள் பற்றாக்குறையை தொடர்ந்து எதிர்நோக்குவதால் தோல்வியைச் சந்திக்கவேண்டிவரும் என்று அரசாங்கம் கருதுகின்ற தேர்தல் ஒன்றை பிற்போடுவதற்கு எந்த நேரத்திலும் நிதிப்பற்றாக்குறையைக் காரணமாக காண்பிக்க முடியும்.

இரு நாடுகளிலுமே நடத்தப்படவேண்டியிருப்பவை பாராளுமன்றத் தேர்தல்கள் அல்ல. அடுத்த மட்டத்திலான தேர்தல்களே என்பது கவனிக்கத்தக்கது. மக்களின் கவனத்தில் இல்லாவிட்டாலும் கூட இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலமாக பிற்போடப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளிலுமே இத்தேர்தல்களில் அரசாங்கத்துக்கு கடுமையான தோல்வி ஏற்பட்டால் முன்கூட்டியே பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை எழும் என்ற ஐயம் இருக்கிறது. சட்டப்படி அவ்வாறு செய்யவேண்டும் என்றில்லை. இலங்கையில் சட்டப்படி தற்போது நடத்தப்படவேண்டியிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் போலன்றி பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்களுககும் கூடுதலான காலம் இருக்கிறது. அதனால்தான் ஜனாதிபதி விக்கிரமசிங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகளினால் அல்ல, பாராளுமன்ற தேர்தலின் முடிவுகள் மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்று கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

### ஜனாதிபதியின் தெரிவுகள்

கடந்த ஒரு வருட காலமாக மக்கள் முகங்கொடுத்துவரும் பொருளாதார இடர்ப்பாடுகளின் விளைவாக தற்போதைய தருணத்தில் அரசாங்கம் மோசமான தேர்தல் தோல்வியொன்றை சந்திக்கக்கூடிய வாய்ப்பே இருக்கிறது. சட்டப்படி பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை வருடங்கள் இருக்கின்ற போதிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய தோல்வி, அதை பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் கோரும் சூழ்நிலைக்கு வழிவகுத்து வீதிப்போராட்டங்களும் மூளக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

அதன் காரணத்தினால்தான் அரசாங்கத்தை மாற்றுவதற்கான எந்த முயற்சியும் பாராளுமன்றத் தேர்தல் போன்ற உகந்த வழிமுறைகளின் ஊடாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பது முக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்லவேண்டியேற்பட்டது. பாராளுமன்றத்துக்கு பதிலாக வீதிகள் ஒரு தெரிவு அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகளை சீர்குலைப்பதற்கான எந்த முயற்சியுமே இலங்கையின் அரசியலமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் மீறுவதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத் தேர்தல் ஒன்றின் மூலமாக மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்ற ஜனாதிபதியின் கூற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஆளும் கட்சி தோல்வியடைந்தாலும் கூட பாராளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படப்போவதில்லை என்ற எச்சரிக்கையேயாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தோல்வியடைந்த போதிலும் அரசாங்கங்கள் வீழ்ச்சியடையாமல் சட்டப்படி அடுத்த பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும்வரை பதவியில் தொடர்ந்து இருந்ததற்கு கடந்த கால உதாரணங்கள் இருக்கின்றன.

2018 பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அன்றைய அரசாங்கம் படுதோல்வி கண்டது. ஆனால், அந்த பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நிறைவடையும்வரை அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருந்தது. 2020 ஒகஸ்டிலேயே பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே அத்தேர்தலில் அரசாங்கம் படுதோல்வி கண்டது. இப்போது கூட ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை அதிகாரத்தில் இருக்க உறுதிபூண்டிருப்பதாக தெரிகிறது. 2018 பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தோல்வி கண்ட அரசாங்கத்துக்குப் பிறகு நேர்ந்த கதி தனக்கு ஏற்படுவதை தவிர்ப்பதே இன்றைய அரசாங்கத்துக்கு இருக்கும் சவாலாகும். 2018ஆம் ஆண்டில் விக்கிரமசிங்க பிரதமராகவே பதவியில் இருந்தார். ஆனால், இப்போது அவர் உச்சபட்ச அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக இருக்கிறார்.

இதுவே அன்றைய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் இடையிலான வித்தியாசம். தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இரண்டரை வருடங்கள் நிறைவடைந்த நிலையில், தனது விருப்பப்படி எந்த நேரத்தலும் பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய அதிகாரத்தை பெற்றிருக்கிறார்.

தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தாங்கள் தோல்வியைச் சந்திக்கக்கூடிய தேர்தலுக்கு முகங்கொடுக்க ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பப்போவதில்லை என்பதால் அவர்கள் ஜனாதிபதிக்கு பணிந்தவர்களாக நடந்துகொள்வதற்கான சாத்தியமே இருக்கிறது.

அதனால் ஜனாதிபதி மனதிற்கொண்டுள்ள இரு விவகாரங்களில் அவர் தனது அதிகாரத்தை முழுமையாக செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது.

ஒன்று இலங்கையின் பொருளாதார மீட்டெடுப்பது. மற்றையது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது. இவற்றுக்கு பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறுவதில் அவர் அக்கறை செலுத்துகிறார்.



கலாநிதி
ஜெஹான் பெரேரா

## தவக்கால சிந்தனை



### நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்

அக்காலத்தில் இயேசு பரிசேயரை நோக்கிக் கூறியது: “செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாக இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் கதவு அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலைவில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர், “தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும். இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்ய அவரை அனுப்பும். ஏனெனில், இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்'' என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம், ''மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய். அதேவேளை, இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார். நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்றுள்ளது. ஆகையால், இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது'' என்றார்.

## நக்கல் நமசிவாயம்

**தேர்தல் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 25ஆம் திகதி அரசின் தேசிய சித்திரைப் புத்தாண்டுவிழா நடக்கிறதாம்... திறைசேரிக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நடக்கும் கயிறு இழுக்கும் போட்டி அண்டைக்கும் நடக்கும்போல..!**



# கொலன்னாவ வடிநில வெள்ளப்பெருக்கு பாதிப்பைக் குறைக்க கால்வாய்களை புனரமைக்க நடவடிக்கை

## 2 புதிய நீரேற்று நிலையங்களுடன் 8,700 மில்லியன் ரூபா செலவில் திட்டம்

கொலன்னாவ வடிநில வெள்ளத்தின் தாக்கத்தைக் குறைக்கவும் அதற்கு ஒரு நிலையான நீண்டகாலத் தீர்வை நடைமுறைப்படுவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் அமைச்சரவையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்தால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 8,700 மில்லியனாகும்.

கொலன்னாவ வடிநில வெள்ளம் தணிப்புத் திட்டம் பல கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும். அதன்படி, முதல் கட்டத்தின் கீழ் தஹம்வெல கால்வாய், பஸ்ஸன்ன கால்வாய், சலலிஹினி கால்வாய், இரண்டாம் நிலை கால்வாய் ஆகியன புனரமைப்புச் செய்யப்படும்.

மேலும், இரண்டாம் கட்டத்தின் கீழ், தண்டுதோட்டை கால்வாய் மற்றும் இப் பகுதியில் உள்ள மற்ற கால்வாய்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன், சலலிஹினி கால்வாய் மற்றும் தண்டுதோட்டை கால்வாய்களில் நீரை வெளியேற்ற இரண்டு நீரேற்று நிலையங்கள் நிறுவவும் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திலும் முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த இரண்டு நீரேற்று நிலையங்களும் விநாடிக்கு 10 கன மீற்றர் மற்றும் நொடிக்கு 5 கன மீற்றர் திறன் இருத்தல் வேண்டும்.

2020 - 2022 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தின் பணிகள் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், கொவிட் -19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அந்த நேரத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு கட்டுமானப் பணி தாமதமாகியது.

களனி கங்கை நிரம்பி வழிவதால் கொலன்னாவ மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ வடிகால் வாய்க்கால் பாரிய நகரமயமாக்கல் காரணமாக வெள்ளம் அதிகரித்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அந்த பெருஞ்சுமையிலிருந்து மக்களை விடுவிக்கும் வகையில் கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுப்புற சூழலை மேம்படுத்தும் நோக்கில், இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களை மட்டும் பணியமர்த்தி பயணித்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

## கட்டுநாயக்கவிலிருந்து திருச்சிக்கு பறந்தது



பெண் விமானிகள் மற்றும் பெண்களை மாத்திரம் கொண்ட விமானக் குழு உறுப்பினர்களுடன் இந்தியாவின் திருச்சிக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விமானமொன்றை அனுப்பியது.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், நேற்று (08) காலை இவ்வாறு விமானமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஏ-320 எயார்பஸ் ரக விமானம் அனுப்பப்பட்டதுடன், கெப்டன் சாமிக்க ரூபசிங்க பிரதான விமானியாகவும், பிமாலி ஜீவந்தர துணை விமானியாகவும் இருந்தனர்.

இது தவிர, விமானப் பணியாளர்களென 05 பெண் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அவர்களில் விமான நடவடிக்கைகளின் பிரதானி ரோஷனி திஸாநாயக்க, கெபின் மேற்பார்வையாளர் உபுலி வர்ணகுல, விமானப் பணிப்பெண் லக்மினி திஸாநாயக்க, ஜெயகலனி கின்சன் மற்றும் ஹர்ஷி வல்பொல ஆகியோர் அடங்குவர்.

நேற்று (08) காலை 08.10 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-131இல் இந்தியாவின் திருச்சிக்கு 67 பயணிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த பெண் விமானிகள் மற்றும் பெண் ஊழியர்கள் இன்றிரவு 11.10 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-132இல் 61 பயணிகளை ஏற்றிக்கொண்டு இந்தியாவின் திருச்சியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளனர்.

# பாலர் பாடசாலையில் மத ரீதியான செயற்பாடு பிரதேச செயலகத்தின் தலையீட்டால் நிறுத்தம்

வலி. வடக்கு மீள்குடியேற்றக் கிராமமான நல்லிணக்கபுரத்திலுள்ள பாலர் பாடசாலை ஒன்றில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் மதச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எடுத்த முயற்சிகள் பிரதேச செயலகத்தின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வலி. வடக்கு மீள்குடியேற்ற கிராமமான நல்லிணக்கபுரத்தில் இராணுவத்தினரால் முன்பள்ளி மாணவர்களுக்கான கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு முன்பள்ளிச் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், குறித்த முன்பள்ளியை மதக் குழு ஒன்று தமது செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்காக முன்பள்ளியில் மாணவர்கள் குறைவு என்பதை காரணங்காட்டி தமது செயற்பாடுகளை குறித்த முன்பள்ளியில் ஊக்குவிக்க ஆரம்பித்தது.

குறித்த விடயம் தொடர்பில் சிவசேனை அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரனால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவசிறி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

பாலர் பாடசாலையைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான மதச் செயற்பாட்டுக் குழுவினரை குறித்த முன்பள்ளியிலிருந்து வெளியேறுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# முச்சக்கரவண்டி விபத்தில் மூன்று வயதுச் சிறுமி பலி

உடதும்பர – மடுகல்ல வீதியின் கலல்கமுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் (07) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சிறுமி பயணித்த முச்சக்கரவண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுமி படுகாயமடைந்த நிலையில், முதலில் உடுதும்பர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீமுரே பகுதியைச் சேர்ந்த மூன்று வயது சிறுமி உயிரிழந்துள்ள நிலையில், உடுதும்பர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அம்பாறை மாவட்டம், தெஹியத்தகண்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் 'தராசு' சின்னத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்குள்ள ஹெணானிகல ஆதிவாசிகள் கிராமத்தில் வசிக்கும் வேடுவர் ஒருவரும் அந்தக் கட்சியில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ளார்.

# நுவரெலியா பொது வைத்தியசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்



(நானுஓயா நிருபர்)

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவத்துறையும் பல்வேறு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரச வைத்தியசாலையில் நிகழும் மருந்துத் தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்பவற்றை நிவர்த்திசெய்து வளங்களை சீரான முறையில் வழங்குமாறு கோரியும், முறையற்ற விதத்தில் தன்னிச்சையாக வரி என்ற போர்வையில் அரசால் பறிமுதல் செய்யப்படும் சம்பளப் பணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு ஆதரவாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர்களும் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று (07) முன்னெடுத்திருந்தனர்.

இப்பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநோயாளர் பிரிவிற்கு மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்று மருந்து எழுதப்பட்ட துண்டு வழங்கப்பட்டது. ஆனால், மருந்து விநியோகம் செய்யும் பிரிவு ஊழியர்கள் சமுகமளித்துள்ள நிலையிலும் மருந்தகங்கள் மூடப்பட்டிருந்தன.

இதனால் வைத்தியர்கள் பரிந்துரைக்கப்படுகின்ற மருந்தை பணம் செலுத்தி தனியார் மருந்தகங்களில் நோயாளிகள் பெற்றுக்கொள்வதை அவதானிக்க முடிந்தது. எனினும், மருந்தகம் சேவைகள் இயங்காமையினால் பணமின்றி நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன எந்தவித இடையூறுமின்றி வழமைபோல் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி

பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


நாடளாவிய ரீதியில் 3,269 நிலையங்களில் அன்றைய தினம் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.10 மணிவரை பரீட்சை நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளையும் தனிப்பட்ட முறையில் பதிவிறக்கம் செய்ய முடியாது எனவும், அதற்கான பணிகளை பாடசாலைகளே மேற்கொள்ள வேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்களின் பெயர், ஊடகம், தேசிய அடையாள அட்டை எண், பெண்/ஆண் ஆகிய திருத்தங்கள் அதிபர்களின் ஆதரவுடன் அதே இணையதளம் மூலம் செய்யப்பட வேண்டும்.

அத்துடன், உரிய திருத்தங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவு நிறைவடையும் எனவும், மீளாய்வு திகதிகள் மீண்டும் நீடிக்கப்பட மாட்டாது எனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சிறிசுமண தேரருக்கு பிடியாணை



மோசடி வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலிக்கு உதவியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிணையில் உள்ள பொரளை சிறிசுமண தேரரை கைதுசெய்து முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (08) பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பற்ற முறையில் வாழும் 3 இலட்சத்து 43 ஆயிரம் சிறுவர்கள்

பல்வேறு காரணங்களால் சுமார் 3 இலட்சத்து 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறார்கள் பாதுகாப்பற்ற முறையில் நாட்டில் வாழ்வதாக ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மொத்த சிறார்களின் 10 வீதமானோர் இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் வசிப்பதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொருளாதார மற்றும் பல்வேறு சமூக காரணங்களால் சிறுவர்கள் பாதுகாப்பற்ற சூழலை எதிர்கொண்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சிறுவர்கள் அநாதை இல்லங்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கும் வேறு மாற்று முறைகள் மூலம் அவர்களை பராமரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மாற்றும் பாதுகாப்பு அமைப்பின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## 03.08.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 4 5665 | 108 5688 |
| கனேடியன் டொலர் | 115 58 | 131 135 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 33 2840 | 37 317 |
| யூரோ | 22 0811 | 238 8828 |
| ஜப்பான் யென் | 1 1675 | 1 3052 |
| சிங்கப்பூர் டொலர் | 12 7801 | 134 3 47 |
| ஸ்ரேலிங் பவுன் | 26 5202 | 281 2862 |
| சுவிஸ் பிரான்ங் | 22 0007 | 242 4520 |
| ஐ.அ.டொலர் | 202 6638 | 220 472 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 755 2338 |
| குவைட் | குவைட் தினார் | 0, 51 8382 |
| ஓமான் | ஓமான் றியால் | 737 3212 |
| கட்டார் | கட்டார் றியால் | 78 40 7 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 76 077 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 77 8148 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5052 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 9 5 4 9 4 5

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம்: 3294 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 84,707,366.80
ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 02 26 53 80

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1507 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,340,022.80
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள்: 2 3 2 4 8 4

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1082 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 80,296,263.20
ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 09 32 47 60

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம்: 361 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 3,033,708.60
வெற்றி இலக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 03 36 47 55 — விசேட இலக்கினம்: மேஷம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1400 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 306,053,938.00
ஆங்கில எழுத்து: G — சுப்பர் இலக்கம்: 12 — வெற்றி இலக்கங்கள்: 25 42 60 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00


## செலான் வங்கி பீ.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்),சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - கட்டுநாயக்க கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

மண்டாவெலயை வதிவிடமாகக்கொண்ட பிரசன்ன குமார புத்பிட்டிய என்பவர் "கடப்பாட்டாளராகவும் / ஈடுவைத்தவராகவும்'' என்ற வகையில் பணம் செலுத்த தவறியுள்ளார். அதனால் பிரசித்த நொத்தாரிசு T.A.N.N.தென்னகோன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.07.22ஆம் திகதி 2351ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் செலான் வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது,

**2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி., இல. 90, காலி வீதி, கொழும்பு 3 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏலவிற்பனையானது. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் மெதலஸ்ஸ கோரளே, உடபொல தபதெனி ஹத்பத்துவே பொல்கஹாவெல பிரதேச சபை எல்லைக்குள் பொதுஹெர கிராம சேவகர் பிரிவிற்குள் மற்றும் பொல்கஹாவெல பிரதேச செயலகப் பிரிவில் பொதுஹெர கிராமத்தில் அமைந்துள்ளது. உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ்.பீ.திசாசேகர என்பவரினால் வரையப்பட்ட 2018.03.06ஆம் திகதியிடப்பட்ட 3753ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹிடினாவத்த கஹடகஹாமுலஹேன மற்றும் பொல்கஹாமுலஹேன என்று அழைக்கப்படும் காணி லொட் 2 என்று அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித் துண்டின் அளவு ஒரு றூட் மற்றும் இருபது பேர்ச்சஸ் (ஏ.0-றூ.1-பே.20) விசாலமான கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் மேலும் பொது வீதிகளையும் கொண்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** பொத்துஹெர சந்தியில் இருந்து கொழும்பு நோக்கி 150 மீற்றர் சென்ற பின் இடது பக்கத்திலுள்ள பன்சல வீதியை அடையலாம். அந்த வீதியில் 350 மீற்றர் வரை சென்ற பிறகு இந்த விடயத்திற்கான காணி வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:-** 2023.01.27ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2023.02.03ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும்பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3,000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது. வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை. திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி இலக்கங்கள்: 011-2456478, 011-2456473


**எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.**

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர்.**
**விலைமதிப்பீட்டாளர் மற்றும்**
**உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i. ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 0714318252**

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்

# திருவள்ளுவர் – உலக மகளிர் தினம் ஒருசேர அனுஷ்டிப்பு



(யாழ். நிருபர்)

திருவள்ளுவர் நாள் மற்றும் உலக மகளிர் தினம் என்பன கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்றுக் காலை (08) ஒருசேர அனுஷ்டிக்கப்பட்டன.

கலாசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலாசாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மாசி உத்தர நாளில் இடம்பெறும் திருவள்ளுவர் குருபூசையை அனுஷ்டிக்கும் வகையில் மலர் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. கலாசாலை அதிபர், அதிதி பேச்சாளராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் மற்றும் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் என அனைவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற அரங்க நிகழ்வுகளில் 'பிள்ளைகளை மையப்படுத்திய கல்வியும் பெண்களும்' என்ற பொருளில் கலாசாலை விரிவுரையாளர் பிரபாலினி தனமும், 'வள்ளுவம் தந்த வள்ளுவர்' என்ற பொருளில் தமிழ் சிறப்பு நெறி ஆசிரிய மாணவி எம்.ஏ.சமீனாவும் 'வள்ளுவரும் பெண்மையும்' என்ற பொருளில் இரா. செல்வவடிவேலும் உரையாற்றினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தினமும் காலை பிரார்த்தனையின்போது திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்துக் குறட்பாக்கள் பாடப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

# பதிவுசெய்யப்படாத வட்டிக்காரர்களால் தென்மராட்சி மக்கள் பெரிதும் பாதிப்பு

## சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி நிருபர்)



பதிவு செய்யப்படாத வட்டிக்காரர்களால் தென்மராட்சி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் அ.பாலமயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (07) சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நகரசபை எல்லைக்குள் தனியார் சிலரால் அதிகரித்த வட்டிக்குப் பணம் கடனாக கொடுக்கப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மாதாந்தம் வட்டியாக பத்தாயிரம் ரூபா என்ற அதிகரித்த தொகையை அறவிடுகின்றனர். பின்னர் குறித்த பணத்தை வசூலிக்க வாள்களுடன் இரவுவேளைகளில் வீடுகளுக்குச் செல்லும் நிலையும் காணப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் குறித்த தொழிலை மேற்கொள்பவர்கள் பலரும் எந்தவிதமான பதிவுகளும் இல்லாதவர்களாகவே உள்ளனர்.

எனவே, சாவகச்சேரி நகரசபை பொதுமக்களின் நலன்கருதி குறித்த தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவிதமான அனுமதியையும் வழங்கக்கூடாது.

அனுமதிகோரி அவர்கள் பதிவுகளை மேற்கொண்டால் அவற்றை மக்களின் நலன்கருதி நிராகரிக்க வேண்டும் – என்றார்.

# வடமராட்சி கிழக்கில் தோல் கட்டி நோயினால் 08 மாடுகள் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் மாடுகளுக்கு தோல் கட்டி நோய் ஏற்பட்டதினால், 8 மாடுகள் உயிரிழந்துள்ளன. மேலும், 15 மாடுகள் பெரியம்மை நோயுடன் இனங்காணப்பட்டுள்ளன,

நோயுடன் இனங்காணப்பட்ட மாடுகளுக்கு மருதங்கேணி கால்நடை வைத்தியசாலை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.சுகிர்தன் சிகிச்சையளித்து வருகின்றார்.

வடமராட்சி கிழக்கு, கொட்டோடை பகுதியில் பல மாடுகளுக்கு தோல் கட்டி நோய் இனங்காணப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் எட்டு மாடுகள் இறந்துள்ளதாகவும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுமாறும் பண்ணையாளர்கள் கோரி வருகின்றனர்.

# அரபு நாட்டுக்கு வீட்டு வேலைக்காகச் சென்ற மனைவியைக் காணவில்லை

## யாழிலுள்ள வெளிநாட்டுப் பணியகத்துக்கு கணவர் முறைப்பாடு

(யாழ். நிருபர்)

அரேபிய நாட்டுக்கு வீட்டுப் பணிக்காகச் சென்ற பெண்ணொருவர் காணாமல்போயுள்ளதாக அவரது கணவர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு பணியகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பச்சிலைப்பள்ளி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 39 வயதுடைய கோமதி பஞ்சலிங்கம் என்பவரே அரபு நாட்டுக்கு பணிக்காக சென்றிருந்த நிலையில், காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் அவரது கணவர் தெரிவிக்கையில்,

"கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வீட்டுப்பணிக்காக மனைவி அரபு நாட்டுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து கடந்த இரண்டு மாதங்களாக பணம் அனுப்பியிருந்தார்.

இந்த மாதம் சம்பளம் அனுப்பவில்லை. அதனையடுத்து, மனைவியுடன் தொடர்புகொள்ள முயற்சித்தபோது, தொடர்பு கிடைக்கவில்லை. அதனால் அவர் பணிக்காகச் சென்றிருந்த வீட்டு உரிமையாளருக்கு தொடர்பை ஏற்படுத்தி விசாரித்தபோது, அவர் தப்பிச் சென்றுவிட்டார் என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

வீட்டு உரிமையாளரான பெண், எனது மனைவி வீட்டின் முன்பக்க வாயிலாலேயே தப்பிச் சென்றார் என தெரிவிக்கிறார்.

அவரது கணவன் வீட்டு மாடியிலிருந்த ஏணியால் தப்பிச் சென்றுள்ளார் என தெரிவித்தார்.

அவர்களின் முரண்பாடான பதிலாலேயே எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மனைவி காணாமல் போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் உரையாடும்போது, பணிக்கு சென்றுள்ள வீட்டு உரிமையாளர்களுடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தனது தொலைபேசி மற்றும் கடவுச்சீட்டு என்பவற்றை பறித்து வைத்துள்ளதாகவும் அதனைத் தருமாறு கேட்டு முரண்பட்டதாகவும் என்னிடம் தெரிவித்தார்.

அந்நிலையில், கடந்த 4ஆம் திகதிமுதல் மனைவியுடன் எந்தத் தொடர்பும் ஏற்படுத்த முடியவில்லை. அதனையடுத்து வீட்டு உரிமையாளர்களுடன் அரபு மொழியில் உரையாடியபோதே, மனைவி காணாமல்போயுள்ளதாக தெரிவித்தார்.

எனது மனைவி தற்போது உயிருடன் இருக்கின்றாரா அல்லது இல்லையா? வீட்டு உரிமையாளரால் தாக்கப்பட்டு இறந்துவிட்டாரா? என பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்ய சென்றிருந்தபோது, இவ்வாறு வீட்டுப் பணிக்காக செல்வோர் 2 வருடங்களைக் கடந்திருந்தால் மட்டுமே நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறில்லாத பட்சத்தில் பணிக்காக அனுப்பிய முகவர்களே அதற்கு பொறுப்பு எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே, அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நாட்டின் தலைவர் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு எனது மனைவியை மீட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## கண்டி பொலிஸ் வலயத்தில்

# போதைப்பொருள் தொடர்பில் 1,845 வழக்குகள் பதிவு

(கண்டி நிருபர்)



கண்டி பொலிஸ் வலயத்தில் போதைப்பொருள் தொடர்பாக மொத்தம் 1845 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ்மா அதிபர் மஹிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் நேற்றுமுன்தினம் (07) இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் ஹெரோயின் தொடர்பான 564 வழக்குகளும், ஐஸ் போதைப்பொருள் தொடர்பாக 142 வழக்குகளும், கஞ்சா போதைப்பொருள் தொடர்பாக 1,139 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த தொடர்ந்தும் பாடசாலை மாணவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதற்காக கண்டி மாவட்டத்தில் மட்டும் 287 பாடசாலைகள் அவதானிக்கப்பட்டு அவர்கள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்செயற்பாடு தொடர்ந்தும் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

# ஓட்டோ விபத்தில் சிறுமி உயிரிழப்பு

(கண்டி நிருபர்)

உடதும்பறை- மடுகல்ல வீதியில் இடம்பெற்ற விபத்தில் 3 வயது சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் (07) உயிரிழந்துள்ளார்.

ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த சிறுமி உடதும்பறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளதாக உடதும்பறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி மீமுறே பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். உடதும்பறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கேகாலை சிறையிலிருந்து தப்பியோடிய கைதி; சிறை அதிகாரிகளின் துப்பாக்கிச்சூட்டில் பலி



(கண்டி நிருபர்)

கேகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதி ஒருவர் மீது சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கைதி உயிரிழந்துள்ளதாக கேகாலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர் இம்புல்கொடவத்தை, மெல்சிரிபுர என்ற இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய எம்.அஜித்தகுமார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.


கேகாலை சிறைச்சாலைக்கு அண்மித்த பிரதேசத்தில் காயமடைந்த நிலையில் கண்டறியப்பட்ட கைதி, கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தநிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களுக்கான பாராளுமன்றத் தேர்தல்







(ஆ.ரமேஸ்)

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பினை வலுப்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைய வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட உடப்புஸ்ஸலாவ மமா/வ/எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ப.முகுந்கமலவண்ணன் தலைமையில் மாணவர் பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் வலப்பனை வலய கல்வி பணிமனையின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.யோகராஜ், ஆசிரியர் ஆலோசகர்களான இளங்கோ மற்றும் துரையரசன் ஆகியோர் கலந்து கொண்டு வாக்கெடுப்பை நடத்தினர்.

மேலும் வாக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 10 மாணவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை பதவியேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கலேவெலயில் விருது வழங்கல் நிகழ்வு

(உக்குவளை நிருபர்)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் கூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வும், இலக்கியத்துறை சமூகத்துறைகளில் பங்களிப்பு நல்கும் ஆர்வலர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வும் மற்றும் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் கதை, கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களைப் பாராட்டி அவர்களுக்கு பரிசில்களை வழங்கும் மாபெரும் நிகழ்வும் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு கலேவெல தேவஹூவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துசிறப்பிக்கவுள்ள இந்நிகழ்வை ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் இலங்கை இளம் எழுத்தாளர்கள் சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்துகின்றன.

இந்நிகழ்விற்கான சகல ஏற்பாடுகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மாத்தளை மாவட்ட இணைப்பாளரும் சம்மேளன தலைவருமான எம்.நிஜாமுதீன், செயலாளர் ஏ.காதிர்கான், இணைப்பாளர் ரசீத் எம்.ரியாழ் ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பால் நோயாளர்கள் அசௌகரியம்











நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தினால் வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளிகள், பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்

நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கங்களினால், மருந்து தட்டுப்பாட்டை நீக்கு, வரிக்கொள்கையை மீளப் பெறு, மேலதிக கொடுப்பனவுக்கான வரையறைகளை நீக்கு என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து பாரிய வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை முழுவதும் உள்ள 33 தொழிற் சங்கங்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளிகள், பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு கொண்டுவரும் நோயாளர்களை சிகிச்சைப் பிரிவுகளுக்கு கொண்டுசெல்வதற்குகூட வைத்தியசாலை ஊழியர்கள் இன்மையால் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர்.

மேலும் பொதுமக்கள் நீண்டநேரமாக வரிசையில் காத்திருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# ஆறு வயதுச் சிறுமி மர்ம மரணம்;
## தாயும் அவரின் கள்ளக்காதலரும் கைது

பாணந்துறை பின்கெல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் 06 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் (07) பிற்பகல் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பாணந்துறை ஹிரண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பண்டாரகம கல்துடே, தம்மகித்தி ஆரம்ப பாடசாலையின் விசேட பிரிவில் கல்வி பயின்ற பெல்பொலவைச் சேர்ந்த ரோஷினி கவிஷ்கா பெரேரா என்ற சிறுமியே துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

தாய் மற்றும் அவரின் கள்ளக் காதலருடன் வசித்துவந்த ஆறு வயதுச் சிறுமி பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததாகவும் இருப்பினும் மருத்துவ உதவி வழங்கப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தந்தை இராணுவ சிறப்புப் படையின் சிப்பாய் எனவும், சிறுமியும் சிறுமியின் தாயும் சில வருடங்களுக்கு முன்னர் அவரிடமிருந்து பிரிந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், சிறுமியின் தாய் பண்டாரகம, ரம்புக்கன பிரதேசத்திலுள்ள கடை ஒன்றில் பணிபுரியும்போது, இன்னொரு நபருடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், மூன்று வாரங்களுக்கு முன்னர், அந்த நபர் சிறுமியையும் சிறுமியின் தாயையும் தனது தாய் வீட்டிற்கு அழைத்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி இதற்கு முன்னர் பல தடவைகள் தாயின் கள்ளக் காதலரால் உடல்ரீதியாக தாக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடுள்ள குழந்தையின் உடலில் பல தழும்புகள் மற்றும் வீக்கங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பாக குழந்தையின் 25 வயது தாயும், அவரின் 29 வயது கள்ளக் காதலரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை, மரணம் தொடர்பான நீதவான் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

# போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த எழுதாரகை
## பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்தப்பட்டது

அண்மையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாய்த்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய எழுதாரகை பயணிகள் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாய்த்த கூட்டத்தில், எழுவைதீவு மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக பழுதடைந்த நிலையிலுள்ள எழுதாரகை கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், கப்பலை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில்




பாதுகாப்பான இடத்தில் கப்பலை நிறுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, வடக்கு மாகாணத்திற்கான கடற்படைத் தளபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் முன்வைத்தார்.

அதற்கமைய எழுதாரகை கப்பல், எழுவைதீவு இறங்குதுறை பகுதியிலிருந்து நேற்று (08) கடற்படையினரால் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுரைச்சோலை ஆலங்குடா கடற்பரப்பில் 400 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்பு





கற்பிட்டி, நுரைச்சோலை ஆலங்குடா கடற்பகுதியில் கடற்படையினரால் நேற்று முன்தினம் (07) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில சுமார் 400 கிலோ கிராம் எடையுள்ள (ஈரமான எடை கொண்ட) கடத்தப்பட்ட பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

வடமேற்கு கடற்படை கட்டளையில் SLNS விஜயாவுடன் இணைக்கப்பட்ட P 220 இன் கரையோர ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் (07) காலை ஆலங்குடா கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான 08 பொதிகளை கைப்பற்றியது.

அதன்படி, கடற்படையினர் அந்தப் பொதிகளை மீட்டெடுத்தபோது, அதில் சுமார் 400 கிலோகிராம் (ஈரமான எடை) எடையுள்ள பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடற்படையின் தொடர்ச்சியான ரோந்து நடவடிக்கைகள் காரணமாக கடத்தல்காரர்கள் இந்த பீடி இலைகளை கடற்பரப்பில் விட்டுச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடத்தல் பொருட்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்கவிலுள்ள சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மஹிந்தவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை 10 நாட்களுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

இந்த உத்தரவு பிறப்பித்த நீதிமன்றம், எதிர்வரும் ஏப்ரல் 20 முதல் 30ஆம் திகதி வரையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கான வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்கியுள்ளது. 2022ஆம் ஆண்டு காலிமுகத்திடல் மைதானத்தில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே கோட்டை நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக தனது சேவைபெறுநரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தென்கொரியாவுக்கு செல்லவேண்டியிருப்பதால், வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குமாறு அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை கருத்திற்கொண்ட கோட்டை நீதவான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடையை நேற்று (08) தற்காலிகமாக நீக்கியுள்ளது.

# மாகாணங்களுக்கிடையே கால்நடைகளை கொண்டுசெல்வதற்கு அனுமதியில்லை

வட மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையே கால்நடைகளை கொண்டுசெல்வதற்கான சுகாதார அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் சில பகுதிகளில் கால்நடைகளிடையே பரவும் வைரஸ் தொற்று காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார்.

லம்பி ஸ்கின் (Lumpy Skin Disease - LSD) என்ற தோல்கட்டி நோய்த் தொற்றுக்குள்ளான சுமார் 25 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக கூறிய அவர், கால்நடைகள் இடையே இந்தத் தொற்று தொடர்ச்சியாக நீடிக்காது என தெரிவித்துள்ளார்.

LSD தொற்றுக்குள்ளான கால்நடைகளை தனியாக பராமரிப்பதனூடாக தொற்று பரவும் வீதத்தைக் குறைக்க முடியுமென அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட கால்நடை வைத்தியர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல கூறினார்.

வட மாகாணத்தில் நோய் தொற்றுக்குள்ளான கால்நடைகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று (08) கொழும்பில் சந்தித்தனர். இதன்போது உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடினர்.

# வெல்லம்பிட்டி 'பரிப்புவா' மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அவரது உறவினர் ஒருவர் காயம்

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டுவில பிரதேசத்தில் மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுக்கு நபரொருவர் இலக்காகியுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 'பரிப்புவா' என அழைக்கப்படும் அசங்கவை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அவரது உறவினர் ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (07) இரவு குறித்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே காயமடைந்துள்ளார்.

கப்பம் கோரிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே குறித்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் துப்பாக்கிச்சூட்டுக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கால்நடை தீவணத்தில் மோசடி

வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4,920 கிலோ கிராம் கால்நடை தீவனத்தை மோசடிசெய்த சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (07) மாலை கொழும்பு துறைமுகத்திலிருந்து 07 கொள்கலன்களில் கால்நடை தீவனம் கொண்டுசெல்லப்பட்டது.

அங்கு, ஒரு கொள்கலனிலிருந்து 14 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா பெறுமதியான 4,920 கிலோகிராம் கால்நடை தீவனத்தை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டமை தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த சந்தேக நபரை கைதுசெய்தனர்.


கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவர் எனத் தெரியவருகிறது.





வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாத ஸ்வாமி ஆலயத்தின் வருடாந்த மாசி மக பிரமோற்சவ விழாவில் நேற்று முன்தினம் (7) தீர்த்த உற்சவம் இடம்பெற்றபோது பெருந்திரளான பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.
(உடப்பு செய்தியாளர்)

# வாள்வெட்டுச் சம்பவத்தில் தலைமறைவான மூவர் கைது



(நெல்லியடி நிருபர்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோவில் பகுதியில் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி ஒருவர் மீது வாளால் வெட்டி காயப்படுத்தி அவரது காரையும் சேதப்படுத்தி தப்பிச்சென்ற நால்வரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரே நேற்று (08) சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் கனடாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டு, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரியவந்துள்ளது.

அத்துடன், பணம் அனுப்பிய நபர் வாள் வெட்டுச் சம்பவத்திற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் வந்த நிலையில், அவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மாபியா போல் செயற்படும் தொல்லியல் திணைக்களம்
## வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் குற்றச்சாட்டு

தொல்லியல் திணைக்களம், அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு ஒரு மாபியாபோல் செயற்பட்டு வருகிறதென நான் எனது அனுபவ ரீதியாக பார்க்கின்றேன் - என வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (07) தனியார் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நல்லூர் பிரதேசத்திலே மந்திரிமனை போன்ற பழமை வாய்ந்த இராசதானிகள் திருத்தம் செய்வதற்காக தொல்லியல் திணைக்களம் அதனை பொறுப்பேற்று இப்போது புனரமைப்பு வேலைகளை செய்வதற்காக உள்ளே யாரும் பார்வையிடவோ அல்லது வேறு விடயங்களுக்கோ உள்ளே வரக்கூடாது என அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களம் முல்லைத்தீவில் குருந்தூர் மலையில் சிவன் ஆலயம் இருக்கின்ற இடங்களைக் கையகப்படுத்தி, அந்தப் பிரதேச மக்கள் ஏற்றுக்கொள்ளாத விடயங்களை திணித்து, சிவன் ஆலயம் இருந்த அடையாளங்களை அழித்து அங்கு ஒரு பௌத்த விகாரை அமைப்பதற்கு நீதிமன்றத்தை நாடியது. இதன்போது நீதிமன்றத்தின் தீர்ப்பினை மீறி, தொல்லியல் திணைக்களம் குருந்தூர் மலையில் பௌத்த விகாரையை நிறுவியது.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மந்திரிமனை உள்ளூராட்சி மன்றங்களுக்குள் உட்பட்டு யாழ். மாநகர சபையின் கீழ் இருந்த காலகட்டத்தில் நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் வந்து பார்வையிட்டு அதனை திருத்தம் செய்ய வேண்டும் எனக் கூறினார்கள்.

அப்போது அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சில ஆண்டுகளில் ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்ததைக் கூறமுடியும்.

ஆனால், இதையெல்லாம் விடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ளே இருக்கின்ற இவ்வாறான செயற்பாடுகளை விசேடமாக தொல்லியல் திணைக்களம் செய்து வருகிறது.

இனங்களை அழித்து வரலாற்றுப்



பொக்கிஷங்களை அழித்து, வரலாற்றுச் சுவடுகளை அழித்து ஓர் இனத்தை எவ்வளவு கேவலமாக நடத்த முடியுமோ அவற்றை எல்லாம் செய்வதற்காக உருவாக்கப்பட்டதே தொல்லியல் திணைக்களம். எனவே, தொல்லியல் திணைக்களம் நல்லூர் மந்திரிமனை விடயத்தில் வெளிப்படையாக செயற்பட வேண்டும் - என்றார்.

# திருகோணமலை, கிண்ணியா வைத்தியசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்




(கிண்ணியா செய்தியாளர்)

கிண்ணியா தள வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் மற்றும் மருந்தாளர்கள் முதலானோர் புதன்கிழமை (08) சுகயீன வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நாடளாவிய ரீதியில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக் காலைமுதல் கிண்ணியா தள வைத்தியசாலையிலும் இவ்வாறான ஒரு நிலை காணப்பட்டது. இதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வந்த பலர் வைத்திய சேவையை பெற முடியாது திரும்பிச்சென்றதை அவதானிக்க முடிந்தது. அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் முக்கியமான சில பிரிவுகள் மாத்திரம் இயங்கின. வெளிநோயாளர் பிரிவில் மருந்துக்கான துண்டு கொடுப்பவர் இல்லாததனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.




(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களும் நேற்று புதன்கிழமை(08) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம் விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கமைவாக நேற்று அனைத்து சுகாதார சிற்றூழியர்களும் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு தூர இடங்களிலிருந்து வருகைதந்த நோயாளர்கள் தமக்குரிய வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இருந்தபோதிலும் வெளிநோயாளர்கள் பிரிவு இயங்காத நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் மாத்திரம் இயங்கியதுடன், திருகோணமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் சுகயீன விடுமுறை பெற்றிருந்த நிலையில், கடற்படையினர் ஒவ்வொரு பிரிவுக்கும் அமர்த்தப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. அதேநேரம் வைத்தியர்களால் மருந்து எழுதப்பட்ட துண்டுகள் கொடுக்கப்பட்டபோதிலும் மருந்தகம் மூடப்பட்ட நிலையில் இருந்தது.

# 5 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கல் கொழும்புக்கு கடத்திச் சென்ற இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்திலிருந்து கொழும்புக்கு முச்சக்கரவண்டியில் 5 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கல் ஒன்றை கடத்திச் சென்ற நிலையில் மட்டக்களப்பு குட்புறுமூலைச் சந்தியில் வைத்து செவ்வாய்க்கிழமை (07) பொலிஸாருடன் கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கும்புறுமூலை சந்தியில் வாழைச்சேனை பொலிஸாருடன் புலனாய்வுப் பிரிவினர் சம்பவதினமான இரவு கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது, மட்டு. கல்லடியிலிருந்து ஓட்டமாவடி நாவலடி சந்திவரை முச்சக்கர வண்டியில் சென்று அங்கிருந்து பஸ்மூலம் கொழும்புக்கு சட்டவிரோதமாக மாணிக்கக்கல்லை கடத்திச்செல்வதற்காக முச்சக்கரவண்டியில் பிரயாணித்த இருவரை கண்காணிப்பில் ஈடுபட்டுவந்த பொலிஸார் மடக்கிப்பிடித்து கைதுசெய்ததுடன், சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கல்லையும் முச்சக்கரவண்டி ஒன்றையும் மீட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கல்லடி மற்றும் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளிர் தினத்தில் வீடுகள் கையளிப்பு




(வாழைச்சேனை, மீராவோடை செய்தியாளர்கள்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சமுர்த்தி, சமூக அபிவிருத்திப் பிரிவினால் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (08) இடம்பெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிறைந்துறைச்சேனை 206 சீ சமுர்த்தி மாதிரிக் கிராமத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக வாழைச்சேனை மத்தி உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.ரமீஸா, மாவட்ட செயலக சமூக அபிவிருத்தி முகாமையாளர் புவிதரன், சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் எம்.எல்.ஏ.மஜீத், திட்ட முகாமையாளர் ஏ.எல்.எம்.சரீப், சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.சாதிக்கீன், கிராம உத்தியோகத்தர் ஏ.எல்.ஜௌபர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அரூசியா பேகம், சீ.ஆர்.பி.ஓ.சபூஸ் பேகம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஐயூப் கான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது, லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இரண்டு பயனாளிகளுக்கு வீடுகள் பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டதுடன், மேலும் இரண்டு வெற்றியாளர்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டன. அத்துடன், சமூக அபிவிருத்திப் பிரிவினால் சேகரிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களும் உதவிப் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

# உயிராபத்து ஏற்பட முன்னர் பாதசாரிகள் கடவையை சீர்செய்து தருமாறு கோரிக்கை

(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி பிரதான வீதிகளில் ஒன்றான கடற்கரை வீதி போக்குவரத்து நெரிசல்கள் நிறைந்த வீதியாகும். இவ்வீதியில் முக்கிய நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன. பிரதான பாடசாலையான மட்/மம/அல்-அமீன் வித்தியாலயம் மற்றும் பெரியபள்ளிவாசல் ஆகியன இவ்வீதியில் அமைந்துள்ளதுடன், அதற்கு முன்னால் உள்ள பாதசாரிகள் கடவை நீண்டகாலமாக அழிந்து காணப்படுகிறது.

ஆகையால், இவ்வீதியால் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பாரிய ஆபத்துகளை எதிர்நோக்கி வருகின்றனர். நாளுக்கு நாள் வீதி விபத்துகள் மூலம் பாரிய



உயிர்ச்சேதங்கள் இடம்பெற்று வருகின்றபோதிலும் இவ்வாறான பாதசாரிகள் கடவை அழிந்துள்ளதும் காரணமாகும். உயிராபத்து ஏற்படுவதற்கு முன்னர் உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு இந்த பாதசாரிகள் கடவைகளை சீர்செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வுகள்





(மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு / கமு / அல் - ஹிலால் வித்தியாலய சர்வதேச மகளிர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி பி.ஜிஹானா ஆலிப், திருமதி எம்.எச்.றியாஸா, கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.பி.நிஸாமியா ஸனூஸ், கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக், பிரதி அதிபர் நுஸ்ரத் பேகம், உதவி அதிபர் ஐனூல் மர்சுனா உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகளும் கலந்துகொண்டனர். இதன்போது அதிதிகள் உட்பட அனைத்து ஆசிரியைகளும் கௌரவிக்கப்பட்டதோடு, ஆசிரியைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.






சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அட்டாளைச்சேனை ஆலங்குளம் கிராமத்தில் சமூக அபிவிருத்திப் பிரிவினாலும் அட்டாளைச்சேனை பிரதேச மகளிர் பிரிவினாலும் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் தலைமையில் மகளிர் தினம் நேற்று புதன்கிழமை (08) நடைபெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர்கள், மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தித் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (திராய்க்கேணி செய்தியாளர்)



(கிண்ணியா செய்தியாளர்)

சர்வதேச மகளிர் தினமான நேற்று புதன்கிழமை(08) ரின்கோ எயிட் மற்றும் வன்னி கோப் நிறுவனம் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதிக்கு நினைவுச்சின்னம் ஒன்றினை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கினர். மகளிர் தின வாழ்த்துச் செய்தி உள்ளடங்கிய நினைவுச்சின்னத்தை கையளித்ததுடன், பிரதேச செயலாளருக்கு ரின்கோ எயிட் நிறுவனத்தினர் வாழ்த்துகளையும் பகிர்ந்துகொண்டனர்.



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடுசெய்த தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிப்பும் விசேட மகளிர் தின கவியரங்கும் கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி கலாநிதி அலவி சரிபுத்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா சபீன், காத்தான்குடி முதல் பெண் இலிகிதர் திருமதி பரீனா றூஹுல்லாஹ், காத்தான்குடி முதல் பெண் நூலகர் திருமதி ஹமீதா சுபைர், காத்தான்குடி பொது நூலக பிரதம நூலகர் திருமதி கமலினி புஸ்பராஜா ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



(பெரியநீலாவணை, மருதமுனை செய்தியாளர்கள்)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்த மருதமுனை மண்ணின் பெண் சாதனையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் பிரதி அதிபர் எம்.சி.நசாரின் ஒருங்கிணைப்போடு புதன்கிழமை (08) நடைபெற்றது.

மகாஓயா பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றும் திருமதி அய்மா நிஹ்மத்துல்லாஹ், கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி பி.ஜிஹானா ஆலிப், எம்.எச்.றியாஸா ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



(கல்லடி செய்தியாளர்)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பண்பாட்டலுவலகமும் மட்டக்களப்பு பொது நூலகமும் இணைந்து நடத்திய "பெண்மையே உலகின் மாபெரும் சக்தி, புரிந்திடு உன்னையன்றி வேறு ஏது சக்தி" எனும் தொனிப்பொருளில், "விட்டு விடுதலையாகி" நிகழ்வு மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை(08) மாலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்ஜனி முகுந்தன், மட்டக்களப்பு மாநகர சபை பிரதி ஆணையாளர் உ.சிவராசா மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் வ.தேவநேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




(திராய்க்கேணி செய்தியாளர்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி றுஹுணு லங்கா ஏற்பாட்டில் புதன்கிழமை (08) அட்டாளைச்சேனை அல்-ஜென்னா வித்தியாலயத்தில் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது. அல்-ஜென்னா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஏ.சி.உபைதுல்லாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ஜனாபா பாத்திமா நஹீஜா முஸாபீர், றுஹுணு லங்காவின் தலைவரும் கலாசார உத்தியோகத்தருமான ஜனாப் எம்.எஸ்.ஜௌபர் மற்றும் ஏ.ஏ.ஹுஸ்னா (WDO), ஸெய்யிதா பர்ஹானா (WDFA) மற்றும் முன்னாள் கூட்டுறவுத் திணைக்களப் பரிசோதகர் ஏ.எல்.ஏ.கபூர் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது சில அரிய இன மரக்கன்றுகள் பிரதேச செயலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.




**சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலகத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்றது. இதன்போது செயலகத்தின் செயலாளர் எம்.கோபாலரெத்தினம் செயலகத்தில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர்களை வாழ்த்தி கௌரவித்து பரிசில்கள் வழங்கினார். (மீனோடைக்கட்டு, கந்தளாய் செய்தியாளர்கள்)**




**கிராமத்துடன் கலந்துரையாடல் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி தோணிகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (08) வவுணதீவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு உரிய மீனவர்களுக்கு இத்தோணிகளை வழங்கினார். (மண்முனை செய்தியாளர்)**

# ஓசைப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மட்டு.வில்

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் சிநேகபூர்வ ஓசைப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12) மட்டு. சிவானந்தா மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர் கே.லவக்குமார் தெரிவித்தார்.

குறித்த சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில், கொழும்பு இரத்மலானை விளையாட்டுக் கழகத்துடன் மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கக் கழகம் மோதவுள்ளது.

இப்போட்டி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3.00 மணிவரை இடம்பெறவுள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வெற்றிபெறும் அணிக்கான பணப்பரிசு மற்றும் கேடயங்களை வழங்கவுள்ளார்.

# டெங்கு நுளம்பை ஒழிக்க சுகாதாரத்துறைக்கு ஒத்துழைக்காதோர் மீது சட்ட நடவடிக்கை

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி

(மாளிகைக்காடு செய்தியாளர்)



தேசிய டெங்கு தடுப்புப் பிரிவின் தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சிக்கமைவாக டெங்கு பரிசோதனை நிகழ்ச்சியும், நுளம்பு ஒழிப்பு முறை பற்றிய பொதுமக்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (07) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பரின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் விளக்கமளித்தார்.

மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம்.வாஜித், பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.பைஸால், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஐ.எல்.லாபீர் உட்பட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய நிர்வாக பிரதேசங்களில் இடம்பெற்ற கள ஆய்வு விஜயத்தின்போது டெங்கு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டதுடன், காணி உரிமையாளர்களுக்கு ஆலோசனைகளும், சிலருக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

காலநிலை மாற்றம் காரணமாக மழை காலம் ஆரம்பமாக உள்ளதனால் நுளம்பு பெருகுவதைக் குறைக்கவும், உங்கள் பகுதியில் டெங்கு பரவுவதைத் தடுக்கவும், தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உங்கள் சுற்றுச்சூழலில் நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் முடியும்.

மேலும், பொதுமக்களாகிய அனைவரும் எமது பிரதேசத்திலிருந்து டெங்கை ஒழிக்க உதவுமாறும் தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர்கள். பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனிக்க வேண்டும். டெங்கை ஒழிக்க சுகாதாரத் துறைக்கு ஒத்துழைக்காதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.



**கல்முனை கல்வி வலயத்திலிருந்து அல்-அஸ்ஹர் வித்தியாலய மாணவி பாத்திமா சேஹா மாகாண மாணவர் பாராளுமன்ற அமர்விற்கு பாடசாலை பாராளுமன்றக் குழுவிலிருந்து தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர், பயிற்றுவித்த ஆசிரியர்கள் உட்பட அம்மாணவியையும் பாடசாலையின் மாணவர் பாராளுமன்றக் குழுவினரையும் படங்களில் காணலாம். (எஸ்.அஷ்ரப்கான்)**

# ‘என் சிறகில் சிக்கிய வானம்’ நூல் வெளியீடு

(பொலிவேரியன் செய்தியாளர்)




மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய ‘என் சிறகில் சிக்கிய வானம்’ (பயணக்கட்டுரைகளின் தொகுதி) எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் சாய்ந்தமருது கமு/மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

SRI LANKA PEN CLUB ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பின் ஏற்பாட்டில், அமைப்பின் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஒலி - ஒளிபரப்பு சிரேஷ்ட ஊடகவியலாளர் பா ஹாஷிம் பா அலவி அஷ்ஷெய்க் இர்பான் மௌலானா முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்வை மின்னல் வெளியீட்டகத்தின் பணிப்பாளரும் நாவலாசிரியருமான அஸீஸ்.எம்.பாயிஸ் தொகுத்து வழங்குகிறார்.

# ‘எல்லாமும் ஒன்றல்ல’ நூல் வெளியீட்டு விழா


பிரபல எழுத்தாளர் உமா வரதராஜனின் ‘எல்லாமும் ஒன்றல்ல’ நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி கல்முனையில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிப்பிக்கப்பட்டு, கல்முனை வியூகம் கலை இலக்கிய அமைப்பினால் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் மாலை 3.30இற்கு வெளியிடப்படவுள்ளது.

மேனாள் பேராசிரியர் செ.யோகராசா நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார். கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் வெளியீட்டுரை நிகழ்த்துவதுடன், மூத்த ஊடகவியலாளர் க. குணராசா முதல் பிரதியை பெற்றுக்கொள்வார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், டொக்டர் திருமதி புஷ்பலதா லோகநாதன், சோலைக்கிளி, மன்சூர் ஏ.காதர், சபா சபேசன், வாசுதேவன், சிவ வரதராஜன், சஞ்சீவி சிவகுமார், பி.சஜிந்ரன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

# போடியார் புலம்பல்!



**இலங்கையில உள்ளூராட்சி சப தேர்தல நடத்த சொல்லி இத்தாலியில ஆர்ப்பாட்டமாம்..! என்ன கொடுமைடா இது. சர்வதேச விசாரண வேண்டும் எண்டு வடக்கு, கிழக்கு தமிழர்கள் கேட்கிறது சரி போலதான் இருக்கு. ஸ்ரீலங்கா ஒண்டுக்கும் உதவாத லாயக்கு இல்லாத நாடு எண்டத இந்த உள்ளூராட்சி தேர்தல் இப்ப ஒலகம் முழுவதும் நிருபித்துள்ளது எலுவா? இப்ப வாறமாதம் 25ஆம் திகதி தேர்தல் எண்டுறாங்க அதுக்கு இடயில நரிட விளையாட்டு குழி பறிப்பாத்தான் இருக்கும்!**

# நில நடுக்கம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கு நில நடுக்கம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை(07) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டதலின்கீழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உலகளாவிய ரீதியிலும், தேசிய ரீதியிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்படுவதனால் நிலநடுக்கம் தொடர்பான அடிப்படையான விடயங்களை சமூகத்திற்கு கொண்டுசேர்க்க



வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக புவியியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.கிருபராஜாவினால் சிறந்த முறையில் வளவாண்மை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி தொடர்பில்

# உரிய நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி செயலகம் அரச அதிபருக்குப் பணிப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி தொடர்பில் அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா தவிசாளர் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைக்கமைய தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் முன்னுரிமை அளித்து, இந்த விடயத்தை ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகம் அம்பாறை அரசாங்க அதிபரை எழுத்துமூலம் பணித்துள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஜனாதிபதி செயலகம் அனுப்பியுள்ள கடிதத்தில், இந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து அல்-மீஸான் பௌண்டேஷன் தவிசாளருக்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சீ.ஏ.சுனித் லோச்சனவுக்கும் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா மையவாடி, கடலரிப்புக்குள்ளாகி பாவிக்க முடியாத நிலைக்கு நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. உடனடியாக மாற்று இடத்தில் புதிய ஜனாஸா மையவாடியை அமைக்கவேண்டிய தேவையுள்ளதால் புதிய காணியொன்றை இதற்காக பெறவேண்டியுள்ளது.

இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து புதிய காணியொன்றை வழங்குமாறுகோரி ஜனாதிபதி, பிரதமர், காணி அமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு மாளிகைக்காடு அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா தவிசாளர் கடந்த மாதம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

மேற்படி அரச முக்கியஸ்தர்களுக்கு முன்வைத்த கோரிக்கையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராம மக்களின் ஜனாஸா மையவாடி கடலரிப்பில் முழுமையாக சேதமாகியுள்ளதுடன், ஜனாஸாக்கள் கடலில் அள்ளுண்டுபோன வரலாறுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதமாகவே ஜனாதிபதி செயலகம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்த பணிப்பை விடுத்துள்ளது. இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயம் துரிதகதியில் முன்னெடுக்கும் என நம்பப்படுகிறது.



**பெரியநீலாவணையைச் சேர்ந்த எஸ்.ஜெயகாந்தன் என்பவரின் 10 ஆயிரம் ரூபா பணம் கல்முனை பிரதான வீதி ஹற்றன் நெசனல் வங்கிக்கு அருகாமையில் வைத்து கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி தொலைந்துள்ளது. இந்தப் பணத்தை நற்பிட்டிமுனையைச் சேர்ந்த ஆசிரியர் எம்.எம்.நகீப் என்பவர் கண்டெடுத்துள்ளார். அவர் கற்பிக்கும் பாடசாலையான கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் வைத்து பணத்தை தொலைத்த ஜெயகாந்தனுக்கு பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர் முன்னிலையில் குறித்த பணம் வழங்கப்பட்டது. இந்த மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்ட ஆசிரியருக்கு பணத்தை தொலைத்தவர் உட்பட பலர் நன்றி தெரிவித்தனர். (அஷ்ரப்கான்)**

# அநாதரவான யானை, மான்குட்டிகளை காப்பாற்றிய வனவிலங்கு அதிகாரிகள்





(புளியந்தீவு செய்தியாளர்)

அநாதரவான யானைக்குட்டியையும் மான்குட்டியையும் மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சேனைப்பயிர்ச்செய்கையாளர்களின் உதவியோடு காப்பாற்றியுள்ளதாக திணைக்கள மாவட்ட அதிகாரி ஏ.ஏ.கலீம் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக மூன்று அடி உயரமான யானைக்குட்டியும் ஒன்றரை அடி உயரமுள்ள மான்குட்டியும் அநாதரவான நிலையில் இருப்பது குறித்து திங்கட்கிழமையன்று (06) எமது திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

அவை இரண்டும் அவ்வப் பகுதியில் வாழும் சேனைப்பயிர்செய்கையாளர்களின் உதவியோடு எமது திணைக்கள அதிகாரிகளின் கடும் பிரயத்தனத்தினால் உயிராபத்தின்றியும் உடல் உபாதையின்றியும் காப்பாற்றப்பட்டுள்ளன. யானைக்குட்டி செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மயிலந்தனை சேனைப்பயிர்ச் செய்கையாளர்கள் வாழும் பிரதேசத்திலும் மான்குட்டி பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடர்ந்த காட்டுப் பிரதேசமான பன்சேனையிலும் அநாதரவான நிலையிலிருந்தே கண்டெடுக்கப்பட்டன.

மான்குட்டியை அம்பாறை மாவட்டத்திற்கான வனவிலங்கு அதிகாரி தனது பொறுப்பில் எடுத்து அதற்கான வைத்திய சேவையை வழங்கி வருவதோடு மான்குட்டிக்கு உயிராபத்து ஏற்பட இடமில்லையெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பகுதிகளிலுள்ள வீதிகளில் பொது சமாதானத்தை சீர்குலைத்த குற்றத்திற்காக பொலிஸாரினால் நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(07) ஆஜர்படுத்தியபோது ஒவ்வொரு நபருக்கும் தலா 3000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. தண்டப்பணம் செலுத்திய பின் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலீம் நகர் பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (07) ஆஜர்படுத்தியபோது 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று தம்பட்டை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படைக் குழுவினர் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நேருபுரம் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்த 600 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (07) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகரையில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு









(வாழைச்சேனை செய்தியாளர்)

‘‘பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறையை நிறுத்து’’ எனும் தொனிப்பொருளில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (07) வாகரை கண்டலடி கடற்கரையில் சிறப்பாக நடைபெற்றன.

மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி மயூரி ஜனனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் என்.தனஞ்சயன், மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் சி குரூஸ், வாகரை பிரதேச செயலாளர் க.அருணன் மற்றும் கல்குடா வலயக் பிரதி கல்விப் பணிப்பாளர் ஜெயவதனன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு பாரம்பரிய கலாசார இசையுடன் வரவேற்கப்பட்டனர். இறைவணக்கத்துடன் தீபச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கௌரவிக்கப்பட்டார். அங்கு அவர் தமது உரையில் தெரிவிக்கையில், சைபர் கிரைம் குற்றங்களுக்கெதிரான நடைமுறைகள் மாவட்ட ரீதியில் அவ்வாறான செயற்பாடு இல்லை என்பது குறைவாக உள்ளது. நீதிமன்றத்தை நாடியே நீதி பெறவேண்டியுள்ளது.

பெண்களுக்கெதிரான இணையவழி ஊடக வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்வாக இதை பார்க்கிறேன். பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கும்வேளை, அவர்கள் இந்த சமூகத்தை உயர்த்திக்கொண்டே இருக்கின்றனர். நாட்டை ஆள்பவர்களாக விமான ஓட்டியாக அரச நிர்வாகத்தில் என பல துறைகளில் பெண்கள் இருக்கின்றார்கள். இதன்போது தங்கள் நிலையை உயர்த்தும்போது பல சவால்களை எதிர்கொள்கின்றார்கள்.இவ்வாறான நிலையில், தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடைந்துள்ளோம். இதனை எவ்வாறு கையாள்வது, எவ்வாறு எங்களை பாதுகாப்பது என்பது பற்றி பெண்களே உணரவேண்டும் என்றார்.

பின்னர் சமகாலத்தில் மிகத் துரித கதியில் அதிகரித்துவரும் பெண்களுக்கெதிரான இணையவழி குற்றங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைப்பாடும் இடைவெளிகளும் மற்றும் சிபாரிசுகளும் என்ற தலைப்பில் மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட வன்முறை அடங்கிய பரிந்துரை அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், ‘‘இணையவழி வன்முறை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்து, இணையவழி வன்முறையை நிறுத்து, இணையத்தின் ஊடாக பெண்களை மிரட்டாதே’’ என்பன போன்ற வாசகங்களை தாங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர்.

கண்டலடி கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்ட பேரணியானது சுமார் 5 கிலோமீற்றர் தூரம் வரை சென்று வாகரை பொது மைதானத்தைச் சென்றடைந்தது. அங்கு பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல் தொடர்பான நாடகம், கவிதை, ஆங்கில பேச்சு, நாட்டுக் கூத்து என்பன நடைபெற்றன.

அருவிப் பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் திருமதி மயூரி ஜனன் சட்டத்தரணி தமது உரையில் கூறுகையில், ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருட கருப்பொருளாக டிஜிட்டல் ஆல் என்கிறது. ஆண் பெண் சமத்துவம் என்பது நடைமுறையில் இருக்க வேண்டும் என்ற உலகம் இன்று தொழில்நுட்பத்திலும் கல்வியிலும் சமத்துவம் இருக்க வேண்டும் என்கிறது. தொழில்நுட்பம் வளர்ந்துகொண்டுபோகும் அளவிற்கு வன்முறையின் வடிவம் மாறி இணையவழி வன்முறையாக பெண்களுக்கெதிராக விரிவடைந்துள்ளது - என்றார்.

## எகிப்தில் சிரிக்கும் ஸ்பிங்ஸ் சிலைகள் கண்டுபிடிப்பு



எகிப்தில் சிரிக்கும் முகம் கொண்ட ஸ்பிங்ஸ் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கெனா மாகாணத்திலுள்ள டெண்டேரா கோவிலில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டபோது இந்தச் சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தச் சிலைகள் பண்டைய ரோமானியப் பேரரசின் பிரதிநிதித்துவமாக இருந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

இந்தச் சிலைகள் கிசா பிரமிட்டுகளிலுள்ள ஸ்பிங்ஸ் சிலைகளை விட சிறியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

முகத்தில் உணர்ச்சியற்றுக் காணப்பட்ட ஸ்பிங்ஸ் சிலைகளையே தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்த நிலையில், சிரித்தபடி கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

## ஈரானில் 5,000 பெண் குழந்தைகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாகத் தகவல்!

ஈரானில், கடந்த நவம்பர் மாதம்முதல் 5,000இற்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஹிஜாப் சரியாக அணியாத இளம்பெண், நல்லொழுக்க பொலிஸாரால் அடித்துக் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து, நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில், கடந்த நவம்பர் மாதம்முதல், பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த மாணவிகள் பலர், பாடசாலை வளாகங்களில் வீசிய துர்நாற்றங்களால் வாந்தி, மூச்சுத்திணறல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

எந்த வகையான விஷம் பயன்படுத்தப்பட்டது? என்பது குறித்து தீவிர ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றன. இதற்கிடையே, பெண் கல்விக்கு எதிரானவர்களால் மாணவிகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அகதிகளின் வருகையைத் தடுக்க கடும் சட்டங்களை இயற்றும் பிரிட்டன்



''பிரித்தானியாவுக்கு சட்டவிரோதமாக வருபவர்கள் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் அல்லது ருவாண்டா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கு நாடு கடத்தப்படுவர்'' என பிரதமர் ரிஷி சுனக் எச்சரித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு பிரான்ஸிலிருந்து பிரித்தானியாவுக்கு படகுகள் மூலம் 28,000 பேர் அகதிகளாக வந்த நிலையில், கடந்தாண்டு, அந்த எண்ணிக்கை 45,000 ஆக அதிகரித்தது.

அகதிகள் வருவதை தடுத்துநிறுத்தும் சட்ட மசோதா, பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சட்டவிரோதமாக வருபவர்கள் மனித உரிமைச் சட்டங்களை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு, பிரித்தானியாவில் தஞ்சமடைய முடியாது எனவும், வாழ்நாள் முழுவதும் அவர்கள் பிரித்தானியாவுக்கு வர தடைவிதிக்கப்படும் என்றும் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷில் திடீரென வெடித்துச் சிதறிய 7 மாடிக் கட்டடம்

### 17 பேர் உயிரிழப்பு; 100 பேர் படுகாயம்



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஏழு மாடிக் கட்டடமொன்று வெடித்துச் சிதறியதில் 2 பெண்கள் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இடிபாடுகளிடையே ஏராளமானோர் சிக்கியுள்ள நிலையில் உயிர்ச்சேதம் மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

200இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல் திடீரென கட்டடம் சரிந்ததாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

இது ஏதும் சதிவேலையா என்று உறுதிசெய்ய முடியவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் வெடிகுண்டு நிபுணர்களுடன் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

## அமெரிக்கா - தென்கொரியா மீது எந்நேரத்திலும் தாக்குதல் நடத்தத் தயார்

### வடகொரிய ஜனாதிபதியின் சகோதரி எச்சரிக்கை



''அமெரிக்கா மற்றும் தென்கொரியா மீது உடனடி தாக்குதல் நடத்த வடகொரியா தயாராக உள்ளது'' - என அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகள், உலக நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுதங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது. இதனால் கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா - தென்கொரிய விமானப் படைகள் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டன.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் யோ ஜோங் வெளியிட்ட அறிக்கையில்,

''அமெரிக்கா மற்றும் தென்கொரிய இராணுவத்தின் நடவடிக்கைகளை வடகொரியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது. தேவைப்படும் நேரத்தில், அமெரிக்கா, தென்கொரியா மீது உடனடி தாக்குதல் நடத்த வடகொரிய இராணுவம் எந்த நேரமும் தயார் நிலையில் உள்ளது'' எனத் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்

## இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில் பலஸ்தீனயர்கள் அறுவர் பலி

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக்கரைப் பகுதியில் அந்நாட்டு இராணுவம் நடத்திய தாக்குதலில் பலஸ்தீனர்கள் அறுவர் உயிரிழந்துள்ளதுடன், 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்குக்கரைப் பகுதியில் இரு யூத சகோதரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் மேற்குக்கரையில் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது ஹமாஸ் இயக்கப் போராளிகள் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் உட்பட 6 பேரை சுட்டுக் கொன்றனர். மேலும் 11 பேர் பலத்த காயமடைந்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் பயங்கர வாதத் தாக்குதலில் உதவியதாகவும், திட்டமிட்டதாகவும் சந்தேகிக்கப்படுகிறார்கள் என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

## 2 இதயம் - 4 கைகள் - 4 கால்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை

ராஜஸ்தான் மாநிலம் ரத்தங்கத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் இரண்டு இதயம், நான்கு கைகள், நான்கு கால்களுடன் பிறந்த குழந்தையொன்று 20 நிமிடத்தில் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தானின் கங்கா ராம் மருத்துவமனையில், கடந்த 5ஆம் திகதி 19 வயதுள்ள ஒரு கர்ப்பிணிப் பெண் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்ட நிலையில், அப்பெண்ணுக்கு அடுத்த சில மணி நேரத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது. பிரசவத்துக்குப் பின் 20 நிமிடங்கள் மட்டுமே உயிருடன் இருந்த குழந்தை, பின்னர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இக்குழந்தை, ஒரு தலை, நான்கு கால்கள், நான்கு கைகள் மற்றும் இரண்டு



இதயங்கள், இரண்டு முதுகெலும்புகளுடன் இருந்ததாகவும், இதனால் அப்பெண்ணுக்குச் சுகப்பிரசவம் செய்ய சிரமமாக இருந்ததாகவும், சரியான நேரத்தில் பிரசவம் செய்து கர்ப்பிணியின் உயிரைக் காப்பாற்றியதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் சபா இல்லம் சம்பியன்



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்தின் 10ஆவது இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.நிஸ்மின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.ஐ.அஹ்சாப், எம்.எல்.எம். முதர்ரிஸ், ஏ.எம்.ஜாபிர் கரீம், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வாகரை பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.எம்.தாஹிர், எச்.எம்.றஹீம், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச முக்கிஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் சபா இல்லம் 941 புள்ளிகளைகளைப் பெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டதுடன், ஹிரா இல்லம் 832 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

## இலங்கை – நியூசிலாந்து டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்

### டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி கனவை நோக்கிய பயணத்தில் இலங்கை



சுற்றுலா இலங்கை அணிக்கும், நியூசிலாந்து அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று கிறைஸ்ட்சேர்ச் நகரில் ஆரம்பமாகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அங்கு நியூசிலாந்து கிரிக்கெட் அணியுடன் மிக முக்கிய டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள், இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் ஆடவுள்ளது.

இலங்கை அணி ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு நியூசிலாந்து டெஸ்ட் தொடர் முக்கியத்துவம் கொண்டதாக அமைகின்றது. இன்று ஆரம்பமாகும் இந்திய – ஆஸி. அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி சமநிலையாகும் போதோ அல்லது இந்திய அணி தோல்வியடையும் போதோ, இலங்கை அணிக்கு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு உருவாகும்.

இவ்வாறு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டால் இலங்கை நியூசிலாந்தை இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என வைட்வொஷ் செய்ய வேண்டும். இவ்வாறு வைட்வொஷ் செய்யும்போது இலங்கை 61.11 என்கிற வெற்றி சதவீதத்துடன் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்குச் செல்ல முடியும்.

## வடக்கின் போர்: இன்று ஆரம்பம்

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

116ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி, இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. ஆரம்ப நாள் நிகழ்வு வியாழக்கிழமை (09) முற்பகல் 8.30 மணிக்கு இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு போட்டி ஆரம்பமாகுமெனா அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுடன் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு பூர்த்தியாவதால் போட்டி தொடர்பான எதிர்பார்ப்பு இரு கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களிடம் காணப்படுகிறது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



பொத்துவில் அல்-அய்ன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உலமாக்கள் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் நிந்தவூர் காஷிபி விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. கிழக்கு மாகாணத்திலுள்ள உலமா கிரிக்கெட் அணிகளுக்கு இடையே லீக் முறையில் 9 அணிகளின் பங்குபற்றலுடன் பொத்துவில் மண்ணில் அல்-அய்ன் விளையாட்டுக் கழகத்தின் 10 வருட பூர்த்தியை முன்னிட்டு இச் சுற்றுத்தொடர் இடம்பெற்றது. (படம் - நிந்தவூர் நிருபர்)

## வரலாறு படைக்குமா ரோகித்தின் படை

(ரமணி)

இந்தியா – அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4ஆவது கடைசி டெஸ்ட் போட்டி குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் இன்று வியாழக்கிழமை தொடங்குகிறது. இந்தப் போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி வேறு எந்த சர்வதேச அணியும் சாதிக்க முடியாத ஒரு வரலாற்றுச் சாதனையை படைக்க காத்திருக்கிறார்கள். அது என்ன வகையான சாதனை என்று இங்கு பார்க்கலாம்.

2013ஆம் ஆண்டுமுதல், சொந்த மண்ணில் இந்தியா தொடர்ந்து 15 டெஸ்ட் தொடர்களை வென்றுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அகமதாபாத் டெஸ்டில் இந்தியா வெற்றிபெற்றால், தொடர்ச்சியாக 16ஆவது டெஸ்ட் தொடரை கைப்பற்றும். உலகில் வேறெந்த அணியும் சொந்த மண்ணில் தொடர்ந்து 10 டெஸ்ட் தொடர்களை வென்றதில்லை.

அவுஸ்திரேலியா சொந்த மண்ணில்



இரண்டு முறை தொடர்ச்சியாக 10 டெஸ்ட் தொடர்களை வென்றுள்ளது. மறுபுறம் மேற்கு இந்திய அணி சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 8 டெஸ்ட் தொடர்களை வென்றுள்ளது.

## உதைபந்து மைதானத்தில் ஏற்பட்ட குளறுபடியில் எழுவர் கைது



துருக்கியிலுள்ள பர்சா நகரில் அமைந்துள்ள மைதானத்தில் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான உதைபந்து போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் குர்து இன மக்கள் அதிகம் வாழும் பகுதியைச் சேர்ந்த அணி பங்கேற்று விளையாடியது. அந்த அணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்த்தரப்பினர் கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து ரசிகர்களிடையே மோதல் வெடித்த நிலையில், மைதானத்திற்குள் சிலர் பட்டாசுகளைக் கொளுத்தி தூக்கிப் போட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மேலும், தண்ணீர்ப் போத்தல்கள் உள்ளிட்ட பொருட்களையும் மைதானத்திற்குள் வீசி எறிந்தனர்.

இதனால் அங்கு ரசிகர்களிடையே வன்முறை உருவானது. இதையடுத்து பொலிஸார் விரைந்து வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இச்சம்பவம் தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7